விலை 20/=

ISSN-2613-828X

# யாழ் களரி

www.yarlgallery.com
yarlgallery@gmail.com

உதயம்: 01 | வைகாசி 2018 | களரி: 05




## மே - 18

## நினைவகலா முள்ளிவாய்க்கால் நினைவுகள்

## முல்லைத்தீவில் சிங்களக் குடியேற்றம்

## தலைநிமிரவைத்த தந்தை செல்வா

## மீளவும் துளிர்க்கும் தியாகத்தின் தூபி

## யாழ் களரியின் "அவதானம் பிரதானம்" விழிப்புணர்வு நாடகம்

## பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டம்

நீ உருவாகி பிறரை உருவாக்கு

## நல்லூரில் மீளவும் துளிர்க்கும்
# தியாகத்தின் தூபி

நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியானது கடந்த காலங்களில் உடைத்து



சேதமாக்கப் பட்டிருந்தது. தற்போது யாழ் மாநகரசபை முதல்வர், ஆணையாளர் ஆகியோரின் முயற்சியால் மீளவும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். ஒரு துளி தண்ணீர் தானும் அருந்தாதிருந்த தியாக திலீபனின் அகிம்சையான தியாகம் எதிர்கால சந்ததிக்கு கடத்தப்பட வேண்டியது மட்டுமல்ல உலக அரங்கிற்கு கோடிட்டுக் காட்டும் தலமாகவும் அமைக்கப்பட வேண்டுமென பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முல்லைத்தீவில் சிங்களக்குடியேற்றம்

எமது நிலம் எமக்கு வேண்டும் என்று தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களிற்கு முழுதாகத் திரும்ப முடியாத சூழலில் திட்ட மிட்டே சிங்களக் குடியேற்றம் இடம் பெற்று வருவது தமிழ் மக்களை வேத னைப் படுத்தியுள்ளது. வெந்து போன மக்களை நொந்து போகச் செய்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக,

முல்லைத்தீவு பிரதேச அரச அதிபருடன் வட மாகாணசபை உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் காலத்தில் வட மாகாண எல்லைகளில் சிங்களக் குடியேற்றங்களோ, பௌத்த விகாரைகளோ இருந்ததில்லை. ஆனால் இன்று சிங்களக் குடியேற்றங்கள், மீன்பிடிகள் என்று அவர்களின் ஆதிக்கம் எல்லைப்புறங்களில் அதிகரித்துக் காணப்படுவது மக்களின் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் படு பாதகமான செயலாகவே எண்ணப்படுகின்றது.

# காணாமல் போனோரில் பலர் — உயிருடன் உள்ளனர் —

### விடுதலையான முன்னாள் போராளியின் கருத்தால் பரபரப்பு

காணாமல் போனவர்களில் பலர் தடுப்பு முகாம்களில் சுய நினைவில்லாத நிலையில் காணப்படுவதாக பூசா தடுப்பு முகாமிலிருந்து அண்மையில் விடுதலையான முன்னாள் போராளி ஒருவர் தெரிவித்திருந்தார். இதன் பின்னணியில் தமிழ் அரசியல் தலைவர்கள் செயற்படுவார்களா? ஏனென்றால் அரச தலைவர் எங்கு தேடியும் காணாமல் போனவர்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று கூறிய நிலையிலேயே மேற்படி கருத்தும் முரண்படுகின்ற நிலையில் காணாமல் போனவர் விடயத்தில் முன்னேற்றகரமான ஒரு வாசலாகவே பாதிக்கப்பட்ட மக்கள் பார்க்கின்றனர். தற்போது காணாமல்போனவர்கள் உயிருடன் இருப்பதாக வெளிவந்த செய்தியானது ஒருபுறம் மகிழ்வையும், மறுபுறம் வேதனையும் கலந்த எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் குற்றவாளிகளாகக் காணப்படாமல் அவர்களைத் தண்டிப்பதற்கும், நிரபராதிகளாக கருதப்பட்டால் அவர்களை விடுதலை செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்? இவ்விடயத்தில் காலம் கடத்துவது அரசிற்கு மேலும் ஆபத்தானதாகவே அமைந்து விடும் ஏனென்றால் ஐ.நா உட்பட உலகத்தின் கண்ணும் இலங்கை அரசு என்ன செய்யப் போகிறது என்பதை உற்று நோக்கி வருகின்றது. காணாமல் போனோரின் உறவுகளான தமிழ் மக்களின் கண்ணீருக்கு தகுந்த மரியாதை கொடுக்கத் தவறுவது நாட்டின் மீதான அவப்பெயரை நீடிக்கும். எனவே தமிழ் மக்களின் பலத்தால் ஆட்சிக்கு வந்த அரசதலைவர் அவரது காலத்திற்குள் தமிழ் மக்களின் தீர்க்கப்படாத பிரச்சனைகளை தீர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்!

# பளையில் ஓர் பசுக்கொலை



பளைப்பிரதேசத்தில் காற்றாடி மூலம் மின்சாரம் பெறும் நிலையம் காணப் படுகின்றது. அதன் அடிவாரத்தில் கடற் கரைப்பக்கமாக சிலர் மாடுகளை இறைச்சியாக்கி படகுமூலம் வேறு பிரதேசங்களுக்குக் கடத்துவதாக யாழ் களரிக்கு ஓர் கடிதம் வந்திருந்தது. இதன் உண்மை நிலையை அறிய எமது குழுவினர் மேற்படி பிரதேசத்திற்கு சென்று உண்மை நிலவரத்தை ஆவணப் படுத்தியுள்ளனர். சட்ட விரோதமாக மாடுகளை வெட்டிய ஆதாரங்கள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. பசுக்களை தெய்வமாக வணங்கும் சைவத் தமிழ் மரபை பழக்கங்கள், சமய அனுட்டானங்களில் பொருத்திப் பார்க் கின்ற பொழுது பசுக்களை இறைச்சிக்காக வெட்டுவது தண்டனைக்கு உரிய குற்றமாகும். மிருக பலிகள் தடை செய்யப்பட்டுள்ள போதும் உரிய தரப்பினரின் அனுசரணையில் பசுவதைகள் இடம் பெறுகிறதா? என்று கேள்வி எழுந்துள்ளது.

# பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டம்

பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றுவதற்காக பிரித்தானியா சென்ற இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்காமல் காலத்தை இழுத்தடிக்க வேண்டாம் என்பதை வலியுறுத்தி புலம் பெயர் இளையோர்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. எதிர்ப்புப் பதாகைகள், கறுப்புக்கொடி,கறுப்பு பலூன் சகிதம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தால் வெளிப்படுத்தினர்.



# தமிழரை தலைநிமிர வைத்த தந்தை செல்வா



தமிழ் தேசிய தந்தை எனப் போற்றப்படும் தமிழரசுக்கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் தலைமையின் முன் மாதிரிகையைப் போற்றாதார் எவருமில்லை. ஈழத்துக் காந்தி என்றும் தேசியத் தலைவர் என்றும் பல்வேறு கோணங்களில் புகழப்படும் தந்தை செல்வாவின் 41வது நினைவுநாள் கடந்த 26.04.2018ல் தந்தை செல்வா தூபிக்கருகில் தகரக் கொட்டகைக்குள்ளே பல்வேறு கருத்துக்களை நினைவூட்டி கலைந்தனர்.

எமது தேசியத் தந்தையின் தூர நோக்கை ஏற்றுக் கொண்ட பல தலைவர்கள் அன்று அர்ப்பணிப்போடு அவரது தலைமைக்குக் கட்டுப்பட்டு தமிழர் தம் வாழ்வும் வளமும் மங்காது காக்கப் பல அறப் போராட்டங்கள், அகிம்சைவழி குரல் கொடுப்புக்கள், சட்டமறுப்பு சத்தியாக் கிரகங்கள் பலவற்றில் மக்களை ஒன்றிணைத்து வடகிழக்கைக் கடந்தும் இன,மத பேதம் கடந்தும் தமிழர் தனித்துவத்தை தன் தலைமைத்துவ சாணக்கியத்தால் ஒரு குரலாக உலக அரங்கிற்கு வெளிப்படுத்தியவர் நினைவாக யாழ் நகரை நிமிர்ந்து பார்க்க வைக்கும் தூபி தமிழினத்தை ஒருங்கே நிமிர்ந்துயர நிற்கும் நினைவுச் சின்னமாகும். இதனை அன்று தந்தை செல்வா நினைவுக் குழுவினரது அயராத முயற்சி அவரது உருவ சிலையோடு புதிய பரம்பரைக்கு நினைவூட்டி வருகிறது.

அவரது அர்ப்பண வாழ்வு மட்டுமல்ல அவரது வளங்களும், உழைப்பும் தூய்மையானதாக மக்களின் மனங்களை நிறைத்த செயல்கள் உலகம் பரவிய தமிழர் நினைவாக உயர்ந்து நிற்கிறது. கட்சியின் கொள்கை, இலட்சியம் பேச்சை விட செயலால் வெளிப்படுத்தப் பட்டதை அவரால் உருவாக்கப்பட்ட தலைமைகளே அன்று சாட்சியானது. அவர்களின் தூரநோக்கு திட்டங்கள் மக்களிடம் சென்றடைய சுதந்திரன் பத்திரிகை அவரது உழைப்புடன் மக்கள் தொடர்பூடகமாக பலரை அறிமுகப் படுத்தியது. சிறந்த தலைமையின் எண்ணப் பகிர்வாக மக்களைச் சென்றடைந்தன.

சுய புகழ்ச்சியோ, குடும்ப சுய நலமோ, பொருள் தேடும் அரசியல்வாதியாகவோ அவர் எத்தருணத்திலும் பொய்யராய் வாழாததால் இன்றும் அவரது வழிகாட்டல் முன்னோரால் நினைவு கூரப் படுகின்றது. இவை இன்றைய கட்சிக்குள் உலாவருவோருக்கு கற்றுக் கொடுக்க சந்தர்ப்பங் குறைவானதால் கட்சியின் கொள்கை உணராது திசை மாறி, தடம் மாறி, பதவிகளைத் தம் புகழ்ச்சிக்காகவும், ஊதியத்திற்காகவும், மக்களின் தேவை உணராத மாலை, மரியாதை, முன்னிருக்கைகளுக்குள் பெருமைகளை வெளிப்படுத்தும் சின்னத் தனங்களும் வளர்வது தூய தலைவனின் பாதையினை கொச்சைப் படுத்தும் செயலாகி விடும் என்பதனை இன்றைய தலைமைகள் சிந்திக்க வேண்டிய தருணமிது.

ஆண்டுதோறும் நினைவுக் கூட்டங்கள் வைப்பதோடு இராது எத்தனை வசதி கொண்ட சந்தர்ப்பமுள்ள பதவி வழியில் இருப்போர் ஒன்று கூடும் தலைமை செயலகம் இரவல் வீடாகவும், தகர கொட்டகைகளாகவும், அகதி முகாம்களாகவும் இருக்க சமாதியில் உள்ள இடத்தில் பொது மண்டபம் அமைக்கப்பட வேண்டும் என்று கதைத்து ஆண்டு தோறும் கலைகின்ற நிலையில் தந்தை செல்வா சதுக்கம் என கல்லை மட்டும் திறந்து வைத்தால் போதாது. தங்கி பேசும் தந்தை செல்வாவின் ஆன்மா வாழும் நினைவாலயமாக அரசறிவியல் ஊட்டும் தலைமையகமாக மாற இக் காலத்தை பயன்படுத்த சகல மட்டத்தினரும் ஒன்று கூடி செயல்படுத்தி அடுத்த ஆண்டில் தந்தை செல்வாவின் நினைவாலயம் பொது மண்டபமாக உரு மாற வேண்டும். தந்தை செல்வாவின் கொள்கை, இலட்சியம், தூர நோக்குக்கான தூயபயணங்கள் தொடரட்டும்.

# யாழ் களரி

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375

பிரதம ஆசிரியர்: ஜோர்ச் ஜெஸ்ரின் |
பொறுப்பாசிரியர்: வேதநாயகம் சஞ்சீவதனுசன் |
வடிவமைப்பு: மு.சதீஸ்குமார் | ஜோய் கிசோன்
ஓவியம் டொமினிக் ஜீவா
ஆலோசகர் குழு
செ.யோசப்பாலா, எஸ் பெருமாள், எஸ்.யேசுதாஸ், எம்.எல்.லாபிர்
பதிப்பு: யாழ்களரி வெளியீட்டகம், முத்து பிறின்டேர்ஸ்
muthuprint@gmail.com
வெளியீடு மற்றும் தொடர்பு முகவரி: ராகஸ்வரம் கலைமன்றம் |
பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1 A.V வீதி, கொழும்புத்துறை
jaffnarakaswaram@gmail.com


# தொங்கு மன்றங்கள் எதிர்காலத்தில் தொடருமா?

நகர மன்றங்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள் வாக்களிப்புக்கள் நடைபெறும் போது மனமாற்றங்கள் கட்சி வேண்டி மாற்றங்கள், கைலஞ்ச சூழலுக்கு வழிகாட்டுமா? நிறைவேற்ற வழிசமைக்குமா? என்ற சந்தேகம் சாதாரன மக்கள் மத்தியில் எழுவது தவிர்க்க முடியாததே, புதியவர்கள் தெரிவுக்கு நல் வாழ்த்துகள் செயற்படும் திறனால் மக்கள் மனதை வெல்லுங்கள் இதுவே எதிர்பார்ப்புக்கள்.

கட்சிக்குள் உள்ள அங்கத்தவர்களே முரண்பட்டு சந்தி சிரிக்க வைத்ததைப் பார்த்தால் கட்சித் தலைமைகளால் சந்தைக் கூட்டம் போல மாறிய மாகாண சபையின் செயல்களை யாவரும் அறிவர். வீட்டுப் பிரச்சினைகளை சந்திக்குக் கொண்டுவருவது கண்டு மௌனியாக நின்ற தலைமையால் தானே உள்ளூராட்சி மண்றில் சரிவுக்குக் காரணம் என்பதை தலைமைகளும் பொறுப்பேற்க வேண்டியது பொறுப்புள்ள தலைமைகளின் பொறுப்புல்லவா?

அடுத்த மாகாண சபைக்கு இடம்பிடிக்க பலர் முனைவதனை பழைய முறை தேர்தலில் இறங்கும் ஆசை கட்சிகளிடம் உண்டு. இதனால் மக்கள் தெரிவு மாறி கட்சித்தலைமைகள் தெரிவு எப்படி இருக்கும் என்பதனை மக்கள் அறிவர். இன்று தமது பகுதி நாடாளுமன்ற, மாகாண சபை, உள்ளூர் உறுப்பினர்கள் யார் என மக்களிடம் கேட்டால் புரியும் விடை. இவை ஒரு கட்சிக்கு மட்டும் பெருத்தமானவை அல்ல மக்களிடம் அரசியல் விழிப்பூட்டலுக்கான திட்டம் எந்தக் கட்சியிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. இதனை வெளிப்படையாக மேற்கொள்ளப்படுமா என்பது சந்தேகமே.

சென்ற தேர்தல்களில் வென்றவர்கள் பற்றிய குறை நிறைகள் எதிலும் ஈடுபடாமலே தேசிய பட்டியலிலே கதிரைபிடித்தவர்கள் ஆட்சியின் தலைவர்கள் அருகில் நின்றால் கதிரை கிடைக்கும் என்பதையே பழைய முறைமை வழிவகுக்கும். மக்கள் விருப்பு வெறுப்புக்களை எப்படி அறிவர்? வாக்களிக்காது ஒதுங்குவோர் மட்டில் ஆர்வமூட்ட யார் முன் வருவார்கள் . அரசியல் தெளிவுகள் யாருக்குத் தேவை என்பதை பாடசாலை, பல்கலைக்கழக மட்டமும் கற்றலுக்கு வழியிருக்கிறது. அரசறிவியல், குடியியல், சரித்திரப் பாட வழியிலும் உணர்த்த முடியும் அல்லவா? தேர்தல் வரும் போது மட்டும் சந்தை கூடும் சரித்திரம் நம்ம ஊரில் சகயம் தான். இதுவே அவர்கள் செலவில்லாச் செயல். என எண்ணுகின்றார்கள். சாதாரண மக்களிற்கும் அரசியல்வாதிகளுக்கும் உள்ள நேரடித் தொடர்புகள் எப்படி அமைந்துள்ளது? என்பதனை இன்று பதவியில் இருப்போர் மீட்டுப் பார்பதே சிறந்தது. தூதுவர்களை வைத்து தூரச் செல்லாது நேரடித் தொடர்புகளிற்கு வழிசமைப்பார்களா?

ஒவ்வொரு நாடாளுமன்ற, மாகாண, உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்படும் நிதிகள், முழுமையாக அடையாளப்படுத்தக் கூடிய தொழில் வாய்ப்புகளிற்கு வழியமைத்ததா? அன்றி பிளாஸ்ரிக் கதிரைகள், மேசைகள், விளையாட்டு உபகரணங்கள், மதில்கள் கட்டுவதுடன் கரைந்து விட்டனவா? ஒதுக்கியவையில் ஒதுங்கியது மக்களிற்குத் தெரியுமா? மக்களே விழிப்புடன் உங்கள் பகுதி அபிவிருத்தி நிதிகள் என்னவாகின்றது என்பதனைக் கண்டறியுங்கள். அதனைச் சீர் செய்ய இயங்கும் பொது அமைப்புக்களான சன சமூக நிலையங்கள் , மாதர் சங்கங்கள் இயக்கும் சக்தியாக மாறி செயற்படுங்கள். 'லெற்றபாற்' சங்கங்களின் செயல்களை புனரமைத்து இயங்கும் மக்கள் சங்கமாக்க முயன்றால் புதியதலைமைகளால் முடியும் என்பதனை பத்திரிகைகளை மட்டும் போடும் கட்டங்களாக இராது சிறுவர் மகிழ்வூட்டும் பூங்காக்களாக கல்வி, ஆன்மீக பொது அமைப்புக்களாக மாதாந்த பௌர்னமி நிகழ்வுகளால் உள்ளூர் கலைப் பண்பாட்டுத் திறமைகளை , கலைப்பயிற்சி மையங்களை அமைத்து எதிர்கால சந்ததிக்கு ரசனை மிக்க மென்மையான ஆரோக்கிய தொடர்பாடலை மேம்படுத்தும் பொது அமைப்புக்களாக மாற்ங்கள் இதுவே இன்றய தேவை.

# முகப்புத்தகத்தில் எச்சரிக்கை வேண்டும்

இணையம் நமக்கு பாதுகாப்பான இடமா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அமெரிக்கா மற்றும் பல் நாட்டு தேர்தல்களில் முறை கேடாக தகவல்கள் பயன்படுத்தியுள்ளமை நிரூபிக்கப் பட்டுள்ளதால் முகநூல் நிறுவுனர் நடந்த முறைகேடுகளை ஒத்துக் கொண்டுள்ளார். பேட்டி ஒன்றில் மன்னிப்பும் கோரியுள்ளார். உலகில் அதிகமானவர்கள் முகநூலைப் பயன்படுத்துகின்றனர். தமது அன்றாட தகவல்களை பதிவு செய்து கொண்டே இருக்கின்றார்கள். இதன் மூலம் ஒவ்வொருவரின் எண்ணமும் தெளிவாக அந்தத் தகவலை வைத்து தெரிந்து கொள்ளலாம்.

நாம் பதிவு செய்யும் தகவல்கள் ஒரு நாட்டை மாற்றும் அளவிற்கு வலிமையுள்ளதாகக் காணப்படுகின்றது. உங்கள் வீட்டுத் தகவல்கள் அடுத்த வீட்டாருக்கும் தெரிய வரும் போது அதை வைத்து அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்பது பற்றி அயல் வீட்டார் தெரிந்து வைத்திருப்பதால் உங்களுக்கு வேண்டப்படாதவர்களிற்கு உங்களைப் பற்றி புட்டு வைக்கலாம், உங்கள் பலவீனங்களைக் கொண்டு நீங்கள் மிரட்டப்படலாம். எனவே தினசரி நடக்கும் நிகள்வுகளை முகநூலில் பதிவு செய்யாதீர்கள்.


உங்கள் தகவல்கள் நண்பர்கள், உறவினர்களிற்கும் மட்டும் தெரிய வேண்டும் என்பதற்காக நீங்கள் முகநூலில் பதியப்படும் குடும்பப் புகைப்படங்கள் மற்றவர்கள் தரவிறக்கம் செய்து கொள்ளப்படலாம். கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா நிறுவனம் முகநூல் தகவல்களை திருடி உள்ளது என்றால் நம்முடைய டுவிட்டர், ஈமெயில் போன்ற கணக்குகளில் இருந்தும் தகவல்களை திருடியிருக்கவும் வாய்ப்புள்ளது.

இதன் அடிப்படையில் முகநூல் நிறுவுனர் மார்க் போலி கணக்குகளை கண்டறிந்து நீக்கவும் முடிவெடுத்துள்ளார். மேலும் இப்படி நடக்காது என உறுதியளித்துள்ளார். அத்தோடு இலங்கையில் இனவாதம் தூண்டப்படுவதாக முகநூல் நிறுத்தப் பட்டமையால் எதிர் காலத்தில் எச்சரிக்கை நடவடிக்கைக்காக சிங்களம், தமிழ் தெரிந்த பல பணியாளர்கள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்களை மட்டுமல்ல செயலிகளை தரவிறக்கும் போது தேவையில்லாத தகவல்களை கேட்டால் அந்த செயலிகளை தரவிறக்கம் செய்வதும் தவிர்க்கப்படல் வேண்டும். அத்துடன் உங்கள் அந்தரங்க தகவல்கள் குடும்பப் படங்கள் போன்றவற்றை பதிவு செய்வதில் விழிப்புணர்வு தேவை இவற்றை தவிர்க்க வேண்டும் எங்களை நாங்களே சிக்கலில் மாட்டும், காட்டிக்கொடுக்கும் நிலைமைகளிலிருந்து நிதானம் கொள்வோமாக. குறிப்பாக தமிழருக்கு சாதகமான முகநூல் கணக்குகள் அதற்கு விரோதமானவர்கள் திறந்து வைத்து இயக்கலாம், உளவு பார்க்கப்படலாம் இப்படி கண்ணுக்குத் தெரியாத அபாயங்கள் காணப்படலாம்.அவதானம் தேவை.

# படைப்பாளிகளின் மறுபக்கம்

எங்கள் ஊர் படைப்பாளிகள் படும் துயர் யார் அறிவர்? எத்தனை அரச அமைப்புக்கள் பொது அமைப்புக்கள் இருந்த போதும் ஒரு படைப்பாளி தன் வெளியீட்டை எழுதித் தொகுத்து வெளியீட்டு விழாவில் முகமனுக்குத் தலைமை வகிப்போர் உரையாற்றுவோர் முதல் பொது அமைப்புக்களின் ஊக்கப்படுத்தலின்றி படைப்புக்களை விட்டு ஒதுக்கியோர் எம் மண்ணில் அதிகம் அதில் அக்கறை செலுத்த வேண்டிய பொறுப்பு உள்ளூராட்சி பண்பாட்டலுவலகர்கள் , கல்விப் பண்பாட்டு அமைச்சுகள் சன சமூக சமாசங்கள் பிரதேச சபைகள் ஒன்று கூடி செயல்பட்டாலே எமது கலைஞர்கள் படைப்பாளிகளாக சொந்த மண்ணில் ஊக்கப்படுத்த முடியும்.

சென்ற காலத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக இருந்த திரு சுந்தரம் டிகவலாலா எடுத்த முயற்சி படைப்பாளர்களை ஊக்கப்படுத்தி 100 நூல் கொள்வனவு திட்டம் சிறந்த பலனை அழித்தது . எழுத்தாளர்களை ஒன்று கூடி கௌரவித்தது இவை போன்ற திட்டமிடல்கள் பல ஊளல்களைக் கழைந்தது. இன்று நூல் கொள்வனவு பாடசாலை நூலநிலையங்கள் மன்றங்கள் தனியே புத்தகசாலைகளுக்குத் தீனி போடவும், கொள்வனவு செய்வோர் கையூட்டல் பெறவுமே வழிவகுத்தது. சனசமூக நிலையங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலை நூலகக் கொள்வனவை உள்ளூர் படைப்புக்களிற்கு ஒதுக்கும் நிதியில் பொதுக் கொள்வனவு செய்தல் பிரித்துக்கொடுத்தல், எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதுடன் பிரதேச காலாச்சார சபைகளில் இருந்து ஒதுக்கி துன்புறும் கலைஞர்களை ஊக்கப்படுத்தவும் சிறந்த திட்டமாக அமையும். செய்வார்களா?



யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டம்

## உலகப் புத்தக நாள்

யாழ் பொதுசன நூலக வாசகர் வட்டம் ஏற்பாடு செய்த 'உலகப் புத்தகநாள்' நிகழ்வு 22.04.2018 ஞாயிற்றுக் கிழமை மாலை 3.00மணிக்கு நூலக குவிமாட கேட்போர் கூடத்தில் வாசகர் வட்டத்தலைவர் அ.யோகராசா தலைமையில் நடைபெற்றது. 'இதில் புத்தகத்தின் வழித்தடம்' எனும் தலைப்பில் ச.சத்தியதேவன். 'சம கால ஈழத்து இலக்கியச் செல்நெறி' எனும் தலைப்பில் தி.செல்வமனோகரன். 'கி.ராஜநாரயணன் படைப்புலகம்' எனும் தலைப்பில் சோ.பத்மநாதன் ஆகியோரின் உரைகள் இந்தப் பகுதியில் தொகுக்கப்பட்டுள்ளது. 'வ.அ.இராசரத்தினம் படைப்புலகம்' எனும் தலைப்பில் த.அஜந்தகுமார் உரையாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

## பெருகி வரும் நவீன யுகத்தில் புத்தகம் தாக்குப்பிடிக்குமா? நிலைத்து நிற்குமா?

ச. சத்தியதேவன்



வாழும் காலம் வரை வாசிப்பது மகிழ்ச்சியானது. புத்கம் என்பது மனிதனுக்கு நன்மையைச் செய்து வந்துள்ளது. மனிதனின் நினைவாற்றலிலிருந்து தொடங்குவதுதான் புத்தகம். மனிதனுடைய ஆயுட்கால மும், புத்தகத்தின் ஆயுட்காலமும் குறுகியதாய்ப் போகும் போது வரி வடிவம் பெறுகிறது. இனக்குழுக்களாக உலகம் வளர்ந்து போக, மனிதன் பல்வேறு குலங்களுடன் தொட ர்பு கொள்ளும்போது வரையறைக்குட்பட்ட நினைவுகள் அர்த்தங்களை கொடுக்கின்றது.

அம்பை எறிதல் (போருக்கான அடையாளம்) பாறை ஓவியங்களில் இருந்து சமூகம் நகர்ந்து வந்துள்ளது. வாய் மொழி ரீதியான புத்தகங்கள் 1500 ஆண்டுகளாக வாய் மொழி மூலமாகவே பயணித்திருக்கின்றது.

புலமை பாரம்பரியம் ஒரு குழுமட்டத்திற்கு பகிர்கின்றது. குறிப்பாக வட இந்தியாவில் செவி வளியாகவும் தென் இந்தியாவில் – நடுகற்கள் வாயிலாகவும் புத்தகம் பயணித்து சுமெரியரின் களிமண் தட்டுக்களிலிருந்து கி.மு – 3500 ஆண்டுகளுக்கு முன், பப்ரஸ் எனும் கோனரப் புல்லால் விலங்குரத்தம், மரச்சாறுகளை கலந்து எழுதினார்கள். சீனாவில் மூங்கில் பயன்பாட்டில் சீலைத்துணிகளிலும் இந்தியாவில் கல்வெட்டுக்களிலும் தொடர்ந்து பனையோலைகளிலும் பயணிக்கத் தொடங்கியது.

கி.பி 1ம், 3ம் நூற்றாண்டில் 'கோட்டைக்ஸ்' முறை பலகையை சதுரமாக்கி நடுவில் மெழுகு நிரப்பி அதில் எழுதப்பட்டது. பின்னர் சீனாவில் காகிதப் பயன்பாடு தொடங்கி ஐரோப்பாவிற்கும் வந்தது. கி.பி1869 இல் முதல் நூலான 'வைர சூத்திரம்' சீன பௌத்த தத்துவ நூலாகும்.

ஒவ்வொரு சமயத்தலங்களான மடங்குகளுள் புத்தகங்கள் முடங்கிப் போகும் நிலையும் காணப்பட்டது. இவ்விதமாக பெருகி வரும் நவீன யுகத்தில் புத்தகம் தாக்குப்பிடிக்குமா? நிலைத்து நிற்குமா? E Book வருகையின் பின் புத்தகம் தேவையா? நூலகம் அருங்காட்சியகமாகப் போய்விடுமா? என்ற நிலையிலும் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. இதன் மூலம் வாசிக்கும் வாய்ப்பு அதிகரிக்கின்றது.

# நாங்கள் குழுக்களாக இருக்கின்றோம்
## குழுமங்களாக மாற வேண்டும்

- செல்வமனோகான் -

ஈழத்து மொழியைப் புரிந்து கொள்வது அன்று ஒரு பிரச்சனையாக இருந்தது. இன்று ஈழத்து இலக்கியங்களை புரிந்து கொள்வதில் சங்கடங்கள் அவர்கள் எழுத்துக்களில் தெரிகின்றது.

ஜெய மோகன் குறிப்பிடுகிறார் 'ஈழத்தவர்கள் யுத்தம் பற்றி அதிகம் எழுதுகிறார்கள்' என்பதாகவே அவரது குறிப்பு காணப்படுகிறது. அவரவரது பின்னணியிலிருந்துதான் அனுபவ சூட்டில் எழுதும்போது அது காலத்தைக் கடந்து நிற்கும்.


'அனோஜன்' சொல்கின்றார் 'ஓரினச் சேர்க்கை பற்றியும் பாலியல் பற்றியும் நம்மவர்கள் எழுதுவதில்லை என்று' தன்னைப் பாதிப்பதைத்தான் படைப்பாளி எழுதுவான். 'வல்லினம்' சொல்கிறது 'யாழ்ப்பாணத்தில் சரியான அமைப்பு இல்லை' இதில் மெல்லிய உண்மையிருக்கிறது. புத்தகங்களை விற்பனை செய்வதில் பின்னடைவுதான் காணப்படுகிறது.

தமிழகத்தில் அதிகளவான பதிப்பகங்கள் மேற்கிளம்பி நிற்கின்றது. எங்கட ஈழத்துத் தமிழர்களின் ஆதரவுடன் தமிழகத்தில் அச்சடிக்கவே சிலர் விரும்புகின்றார்கள். புலம் பெயர் தமிழர்கள் தங்கள் சார்பில் பதிப்பகத்தினை உருவாக்கலாம். கோழிக்கூட்டுக்கும் ஆட்டுக்கும் செலவழிப்பதைப் போல இதற்கும் செய்யலாம். படைப்பாளியே பதிப்பிச்சு கொண்டுதிரிஞ்சு விக்கிற நிலைப்பாடு இருக்கின்றது இதில் எங்களின் தவறும் இருக்கின்றது. நாங்கள் குழுக்களாகத்தான் இருக்கின்றோம் குழுமங்களாக மாற வேண்டும். யுத்தம் நடக்கின்ற போது யுத்தத்தைப் பற்றி எழுதினோம் யுத்தத்தால் பாதிக்கப்படும் போது அவை தவிர்க்க முடியாது.

இன்று மொழியைக் கையாள்வதில் எமது இளையோர்கள் சிதைவுக்குள்ளாயிருக்கின்றனர். இதற்கு விமர்சனம் சார்ந்த வீழ்ச்சியும் காரணம். தன் சார்ந்த விமர்சனமும் காரணம் காய்தல் உவர்தலற்ற விமர்சன போக்கு மனநிலை உருவாக வேண்டும். தனிமனித தாக்குதல்களிலிருந்து தப்பிக்க வேண்டும். பின் நவீனத்துவ எழுத்துக்கள் குறித்த இனத்தின் அடையா ளத்தை அழிப்பதாக இருக்கக் கூடாது தன்னை மூழ்கடிக்கும் கோட்பாட்டை தவிர்த்து கொண்டு வாழப்பழக வேண்டும். படைப்புச்சார்ந்த தர்மம், தனக்கான கொள்கையை நிலைப்பாட்டை வைத்திருக்காமல் மனதில் தோன்றுவதை விடுத்து தன்னையும் தன்னினத்தையும் குறை கூறாத அளவுக்கு 'உடைப்பு' முன்னேற்றத்திற்காக இருக்க வேண்டும்.



காலத்தை வென்று வாழ்பவன் படைப்பாளி இருளும் பகலும் சமமாகத்தான் பயணிக்கின்றது. நாங்கள் எதனோடு கூட்டு என்றுதான் பார்க்க வேண்டும். முதிய படைப்பாளிகளிற்கும் இளைய படைப்பாளிகளிற்கும் ஈழத்தில் தொடர்பாடல் வளர்க்கப்பட வேண்டியுள்ளது. மீள் பதிப்புக்கள், தொகுப்பு முயற்சிகள் என்பன ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். அதைத் தொகுப்பவர்கள் உரையாடல்களை மேற்கொள்ள வேண்டும். படைப்புக்கள் நிறைவாக வருகின்றது. காத்திரமாக வருகிறதா 'என்று தோன்றுகின்றது. நாளாந்தம் மழலைப் படைப்புக்களும் வந்து கொண்டுதான் இருக்கின்றது. ஒட்டு மொத்த வாசகன், படைப்பாளி இணைந்து பயணிக்க எங்களை நாங் களே கேள்விக்குள்ளாக்குவதுடன் அதற்கான செயலிலும் காட்ட முயல வேண்டும். இவ்வாறு செல்வமனோகரன் தெரிவித்தார்.



# எழுத ஆசை உள்ளவர்கள்
## நிறைய படிக்க வேண்டும்

சோ.பத்மநாதன்



8ம் ஆண்டு பெயில் என்று கூறும் ராஜநாராயணன் 1989ல் பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தில் வருகைப் பேராசிரியராக இருந்திருக்கின்றார். எங்கட இடங்களில் "பேப்பர் குவாலிக்கேசன்" பார்ப்பினம்.


இவரின் "கோபல்ல கிராமம்" நாவல் சிறப் பான நூலாகும். "முன்னத்தி ஏர்" என்று கொண்டாடப் படுகின்ற ராஜநாராயணன் மூன்று முறை சிறை சென்றிருக்கின்றார். மேற்படி ஒரு கதையை "கோபல்ல கிராம மக்கள்" "அந்தமான் நாயக்கர்" என்னும் தலைப்பில் தொடராக வெளியிட்டிருக்கிறார். நிறைய சிறுகதை எழுதியிருந்தாலும் "வேட்டி" என்ற கதை மற்றும் "கதவு" எனும் கதை 'கிடை' எனும் குறுநாவல் இப்படி இவரது எழுத்துக்கள் போல எழுத ஆசை உள்ளவர்கள் நிறையப் படிக்க வேண்டும். எழுதியதை திருத்தி திருப்ப திருப்ப எழுத வேண்டும். கோபல்ல புரத்தை எழுதி முடிக்க ஏழு வருடங்கள் ஆனதும் குறிப்பிடத்தக்கது.


## யாழ் களரி நற்பணி மன்றம்

யாழ் களரி - மாத பத்திரிகையின் வாசகர்களே உங்கள் பிரதேசங்களில் உங்கள் தலைமையில் வாசகர் வட்டத்தை உருவாக்கவும் எம்முடன் இணைந்து நற் பணிகளில் பங்கெடுக்கவும் விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். உங்கள் ஊக்கத்திற்கு ஏற்ற ஊதியம் தர நாம் தயார்!

மேலதிக விபர தொடர்களுக்கு:
0776510375
Yarlgallery @ gmail . com

# யாழ் களரி குழுமமும், சொண்ட் நிறுவனமும் இணைவில் சமுக விழிப்புணர்வு நாடகங்கள்



"யாழ்களரி" குழுமத்தினரின் சமூக செயற் பாட்டு பிரிவினரின் 'அவதானம் பிரதானம்' எனும் விழிப்புணர்வு நாடகம் யாழ் மாவட்டத்தின் பல இடங்க ளிலும் குறிப்பாக தெல்லிப்பளை பிரதேச செயலகத் திற்குட்பட்ட பகுதிகளில் ஆற்றுகை செய்யப்பட்டு வரு கின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஊக்க உதவி எனும் செயற்திட்டத்தின் கீழ் யுனிசெவ் நிறுவனம் சொண்ட அமைப்பின் ஊடாக செயற்படுத்தப்படும் 'மிதி வெடி அபாயக் கல்வி' எனும் செயற்திட்டத்தின் கீழ்



மேற்படி விழிப்புணர்வு ஆற்றுகை ஜோ.ஜெஸ்ரினின் எழுத்துரு நெறியாக்கத்திலும் சொண்ட் நிறுவன இயக்குனர் செந்தூர்ராஜாவின் மேற்பார்வையிலும் யாழ்களரி சமூகசெயற்பாட்டு பிரிவினரால் சிறப்புற



ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது.

மிதிவெடி அபாயம் உள்ள மக்கள் மீளக் குடியேறிய பிரதேசங்களில் இத்தகைய மிதிவெடி அபா யக்கல்வியை வீதி நாடகமூடாக ஆற்றுகை செய்வது ஆக்கபூர்வமான பணியாக காணப்படுவதாக பிரதேச வாசிகளின் கருத்துக்களில் தெரிவித்துள்ளனர். மிதி வெடி அபாயம், வீதிவிபத்து, சுகாதாரப்புழக்கங்கள், வீட்டுத்தோட்டம், மரம் நடுகை – மழைநீர் சேகரிப்பு போன்ற விடயங்களை 40 நிமிடங்களில் மக்களுக்கு



விழிப்பூட்டி சிரிக்கவும் சிந்திக்கவும் ஏற்ற வகையில் சிறு வர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆர்வத்துடன் கவனிக்



கும் வகையில் ஆற்றுகை முன்னெடுக்கப்பட்டு வருகின் றமை பாராட்டிற்குரியது.

'ஓடி வாருங்கோ ஓடி வாருங்கோ' என்று பாடிக்கொண்டு வந்தார்கள். பாட்டுக்களின் கவர்வால் இந்த நாடகத்தை பார்க்கச் சென்றேன். பின்னணி இசை யும் நடிப்பும் சொல்லப்பட்ட கருத்துக்களும் சிறப்பாக இருந்ததாக வசாவிளானைச் சேர்ந்த ரவிவர்மன் பார்



வையாளராக வந்த தன்னையும் பாடவைத்துவிட்டது இந்த நாடகம் எனக் குறிப்பிட்டார்.

17.04.2018 அன்று மாலை 4 மணிக்கு வறுத் தலை விளானிலும் 5 மணிக்கு தெல்லிப்பளை கோவில் சந்தியிலும், சுன்னாகம் பஸ்தரிப்பிடத்திலும் 19.04.2018 அன்று 4 மணிக்கு பலாலி வடக்கிலும், 5 மணிக்கு பலாலி தெற்கு கொலணியிலும் 20.04.2018 அன்று மாலை 3.30 மணிக்கு கோணப்புலம் விளையாட்டு மைதானத்திலும் 4.30 மணிக்கு சுதந்திரபுரம் பாரதி சனசமூக நிலைய முன்றலிலும் சிறப்புற ஆற்றுகை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்தும் அண்மையில் விடுவிக்கப்பட்ட மயிலிட்டித்துறை வடக்கிலும் தையிட்டி தெற்கிலுமாக 10 இடங்களில் விழிப்புணர்வு செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# "அவதானம் பிரதானம்"

இயற்கை வளம் நிறைந்த தாய் திரு நாட்டிலே மாணிக்கம். முத்துக்கள். தங்கம். வைரம். கனிப்பொருட் கள் நிறைந்து வரும் நிறைவான பூமியிலே மனிதனால் உருவாக்கப்பட்டு மனித ரையே அழிக்கும் மர்மப் பொருள் களும் உயிரைக் குடிக்கும் அரக்கனாக ஆங்காங்கே மறைந்து புதைந்து வைக்கப்பட்டு உயிராபத்தை விளை விக்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

மக்களின் பாதுகாப்புகளை முன்னெடுத்து "சொண்ட்" நிறுவனத்தார் யாழ்களரியினூடாக மக்களிற்கு அறியப்படுத்தும் "அவதானம் பிரதானம்" என்ற கண் ணோட்டத்தை சற்று சிந்தித்துப் பார்ப்போம். தற்காலத்தில் பிள்ளைகளிற்குப் பெற்றோரின் அருமை தெரிவதில்லை பெற்றோருக்குப் பிள்ளைக ளின் அருமை தெரிவதில்லை. எம்மை பெற்று வளர்த்து சான்றோனாய் வாழவைத்த முதி யோர்களை தனித்து வாழும் நிலைமைக்கு ஆளாக்கின் றோம்.

எம் சிறுவர்களுக்கு நிலாப்பாட்டு. குட்டிக்கதைகள் சொல்லி மகிழ்விப்பவர்கள் அவர்களே. காவல் அர ணாக அமைந்தவர்களும் அவர்களே. எமது முது சொத்துக்களை அகல வைப்பதால் எமது உழைப்பின் சொத்துக்கள் திருடர்களால் பறிபோகப் படுகின்றது. சுத்தம் சுகம் தரும் என்பதற்கிணங்க உணவு உண்ண முன்பும். மலசல கூடம் பாவித்த பின்பும் கைகளைச் சுத்தப்படுத்த வேண் டும். கல்வி எனும் பயிரை விதைத்து நம் நாட்டிலே பற்பல பண்டிதர்கள் உருவாக வேண்டும். கல்வியின் மேன்மை யால் வள்ளுவர். பாரதி. ஔவையார். காந்தியடிகள் போன்ற பல பெரியார்கள் பிறக்க வேண்டும்.

கள்ளம் கபடமற்ற நிறைவான வாழ்வைக் கண் டுகளிக்க வேண்டும். நிலத்தடி நீரைக் கட்டுப்படுத்தி நில புலங்கள் விளைந்து வறுமை அகல வேண்டும். மரங் களை நாட்டி சோலை வனங்களை அமைத்துக் கொள்ள வேண்டும் என ஆடல்கள் பாடல்கள் மூலம் மக்களுக்கு அறியத்தரும் செய்திகயில் முதலீடு இல்லாத வியாபாரம் இரும்பு பொறுக்குதலாகும். சன நடமாட்டம் இல்லாத இடங்களிற்குச் சென்று மர்மப் பொருட்களை இரும்பு என எண்ணி காலிழந்து. கண் இழந்து. உயிரிழந்து குடும்ப உறவுகளை எண்ணி பரிதவிக்கும் காட்சிகள் எம் மனதை உருக்குகின்றது. எடுத்த இரும்பைக் கொண்டு செல்ல முடியாத அவல நிலை உருவாகின்றது.

எதற்கும் அவதானம் பிரதானம் எனும் அச் சுறுத்தல்களை சொண்ட் நிறுவனத்தினூடாக யாழ் களரி சுயநடிப்போடு கூடிய நயம் தென்படுகின்றது. மிதிவெடி. கண்ணிவெடி. எறிகனை என்று பல தரப்பட்ட மர்மப் பொருட்கள் மண்ணினுள்ளே மறைந்து மர்ம அரக்கனாக உயிர் பறிக்கும் சத்துருவாக கம்பீரத் துடன் வீறு நடை போடுகின்றான். எதைப் பிடிப்பேன் எதை உண்பேன் யார் உயிரைக் குடிப்பேன் என மல்யுத்த வீர னாய் எதிர் பார்த்து நிற்கும் காட்சி எம் மனதில் விழிப்பு ணர்வை ஏற்படுத்துகின்றது.

நெறியாளன் கையில் பல விதமான சிந்தனைக் குரிய விடயங்களை முன்வைத்து விளிப்புணர்வு நாட கத்தை அரங்கேற்றிவரும் சமயத்தில் விடுவிக்கப்பட்ட இட மாகிய காங்கேசன்துறை வீதி. வசாவிளான். சுதந்திரபுரம் ஆகிய ஒரு சில இடங் களில் நேரிலே காணக்கூடியதாக இருந்த இச் செய்திகள் யாவும் என் மனதைப் புண்படுத் துவதோடு மக்களுக்கு இது தேவையா? எமது சுயமான இடங்களில் பாதிப்படைந்த நிலையில் திரும்பவும் அங்கு வாழ வேண்டிய நிலையை எண்ணும் போது யாழ் களரி இணைந்து ஒவ்வொரு நபர்களின் முக பாவனைகளும் அழுத்தம் திருத்தங்களும் ஒரு கணம் மெய்சிலிர்க்க வைத் துவிட்டது.

கால்நூற்றாண்டு. அரை நூற்றாண்டு காலமாக பாவிக்கப்படாத இடங்களில் வீடுகள் அமைத்து மிதிவெடி அகற்றி இருந்தாலும் கூட நாம் அவதானக்தோடு சந்தே கத்திற்குரியவற்றை கண் டால் சொண்ட் நிறுவனத்தின ரிற்கு அறிவிக்க கடமைப்பட்டவர் ஆவோம். இதற்குரிய தொலைபேசி எண் (021222 6700)

✍ இந்திராணி
கொழும்புத்துறை

# ஒளிப்படங்களால் இந்த உலகைக் காணுவோம்



**செல்வராஜ் அகல்யா**
ஹட்டன்

புகைப்படத்துறை மற்றும் அழகுக்கலைகளில் முன்னேற வேண்டும் என்ற விருப்புடன் செயற்படுகின்றேன். மனிதர்களைப் புகைப்படம் எடுப்பது மனதுக்கு ஆறுதல் தருகிறது. காரணம் அது கதை சொல்லக் கூடியதாக இருப்பதால் அது எனக்குப் பிடிக்கும். ஆண்கள் தான் இத் துறையில் ஈடுபட முடியும் என சிலர் தடுத்தார்கள் புகைப்படக்கலையில் பெண்களாலும் பிரகாசிக்க முடியும் சமத்துவத்துடன் இந்தக் கலை வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். அழகுக் கலை தொடர்பாக ஈடுபடுகின்றேன். படிப்பிக்கின்றேன். மேலும் இணையத்தளங்கள் மூலம் கற்றுக்கொள்ள முடிகிறது. சின்னதாய் கவிதைகள் எழுதுகின்றேன்.



**துலரத்ன பண்டார நிரஞ்சன் இமல்க**
பொலநறுவை

கணனித்துறை ஆசிரியராக வேலை செய்கின்றேன். தமிழர்கள் என்றால் LTTE என்றுதான் தெரியும் இதைத்தான் சிங்கள ஊடகங்கள் எமக்கு சொன்னது ஆனால் தமிழர்கள் என்றால் எண்டா LTTE இல்லை என்று இங்கே வந்து நிலைமைகளை பார்த்தபோது தான் புரிந்தது உயர்தரமாக சிங்களவர்கள் வாழும் போது தமிழர்கள் கஸ்ரப்படுகின்றார்கள். மொழிதான் பிரச்சினையாக இருக்கிறது அரசியல் வாதிகள் தான் யுத்தம் நடைபெறுவதற்குக்கு காரணமாக இருக்கின்றார்கள்.



**ராஜா தினேஸ்கர்**
வட்டவல

ஆவணப்படுத்தும் புகைப் படங்கள் தான் எனக்கு பிடிக்கும் இவற்றால் தான் சமூக மாற்றத்தை உருவாக்கலாம். 2011 இல் ஸ்ரேட் பாதிப் புக்களோட இருந்திச்சு வீடுகள் உடைந்திருந்திச்சு புகைப்படங்களால் அவற்றை வெளிப்படுத்தினேன். இப்போது அதன் பலா பலனை காண்கின்றோம். புகைப்படத்துறையை தொழிலாகச் செய்ய தற்போது முடிவெடுத்துள்ளேன். முன்பு அப்படிப்பட்ட வேலையைத்தான் செய்து வந்தேன்.



**பிரியலக்ஸ்மி விக்னேஸ்வரக்குருக்கள்**
யாழ்ப்பாணம்

மருத்துவத் தாதியாகப் பணியாற்றுகின்றேன். இந்தத் துறைக்குள் என்னை அழைத்து வந்ததே புகைப்படக் கலை தான். நான் எடுத்த புகைப்படங்கள் இவ்வாறு சிந்திக்க வைத்தது. வயோதிபர்கள் கவனிப்பாரற்று இருக்கின்றார்கள் அவர்களை எதிர்காலத்தில் கவனிக்க அன்பு செய்ய விருப்பம் எனக்கு! கர்நாடக சங்கீதம் வட இலங்கை சங்கீத சபையில் படித்திருக்கின்றேன். ஒப்பனைத் துறையிலும் ஆர்வம் உண்டு. புகைப்படத் துறை தருகிற சந்தோசம் வேறு எதிலுமே இல்லை.



**திரிசான் சனீர**
மின்னேரியா

புகைப்படம், சித்திரம் எனக்குப் பிடிக்கும் சித்திரத்தை எடுத்துக் கொண்டால் இது சிங்களச் சித்திரம் அது தமிழ் சித்திரம் என்றில்லை எல்லாமே கலை வடிவம் தான் இரண்டு வருடத்திற்கு முன்னால் எந்த நிலையில் இருக்க வேண்டும் என்று விரும்பினேனோ அந்த நிலையில் இப்போது இருக்கின்றேன். கலைப்பயணம் செய்யலாம் அது மக்களை ஒன்றிணைக்கும். பத்திரிகைகள் உண்மையானது இல்லை என்று மக்கள் பத்திரிகைகள் வாசிப்பதில்லை கவிதை என்றால் மக்களைக் கவரும் கடும் கவிதைகளும் பலருக்கு விளங்குவதில்லை.

"நடராஜர் கடையில பிட்டு வாங்கும் போது சிங்களவனான எனக்குத் தோன்றியது கொஸ்கமவில ஆயுதக்களஞ்சியம் மோட்டார் வெடித்துச் சிதறியது எம் மவர்கள் அதற்கு அஞ்சினர். அதற்காக எதிர்ப்பு தெரிவித்தபோது யாழ்ப்பாணத்தில் விழுந்தது என்ன பனங்காயா" இப்படி ஒரு கவிதை எழுதி வெளியிட்டேன் என்பதை உங்களுடன் பகிர்வதிலும் மகிழ்ச்சி என்றார்.



**மகாலிங்கம் பிரதீசன்**
திருக்கோவில்

நான் எடுத்த புகைப்படங்கள் என்னை விட மற்றவர்களுக்குப் பிடித்திருந்தது அப்போதுதான் எனக்குள் திறமையிருப்பதை உணர்ந்து அதை செய்யத் தொடங்கினேன். சம்பாதிப்பதற்கு இக் கலையை தெரிவு செய்யவில்லை. வனவிரிவாக்கம் தொடர்பாக வேலை தேடிக்கொண்டிருக்கின்றேன். காரணம் அது தான் எனக்குப் பிடிக்கும். எனக்குத் தெரிந்ததை தெரியாதவர்களிற்கு சொல்லிக் கொடுப்பது தான் எனக்கு சந்தோசம் தருகிறது. இயற்கையான விடயங்கள் எனக்கு சந்தோசம் தருகிறது இயற்கையான விடயங்கள் எனக்குப் பிடிக்கிறது கவிதை எழுது வதிலும் கணனி வேலைகள் செய்வதிலும் ஆர்வம் முண்டு. மின் இணைப்பு வேலைதான் முழு ஈடுபாட்டுடன் செய்து வருகின்றேன். மக்களின் நிலமைக் கேற்ற வகையில் குறைந்த செலவில் நிறைந்த வேலையாக இதைச் செய்து வருகின்றேன்.



**மிருசகி டில்கா சஹானி**
மின்னேரியா

போட்டோ கிரப்பி ஊடாகவே பயணிக்க விருப்பம் காரணம் சமூகத்திற்கு வேலை செய்ய இதுவே ஆதாரமாகும் தமிழர்களும் எல்லாரையும் போலதான் அவர்களோடு ஒற்றுமையாக வாழ விருப்பம் இரு இனங்களிற் கிடையில் பிரச்சினை சமமானது தான் இதற்கான தீர்வு என்பது குறித்து தேடிக்கொண்டிருக்கின்றேன்.



**தயூலன்**
கொழும்புத்துறை

புகைப்படத் துறையில் இணைவதற்கு ஜோ.ஜெஸ்ரின் அவர்கள் எம்மை அழைத்தார். எம்முடன் கொழும்புத்துறையில் இருந்து 15 இளையோர் இணைந்து கொண்டோம். இலங்கையிலுள்ள பல்வேறு இடங்களிற்கும் சென்று புகைப்படம் பிடித்துதோம். பின்னர் கண்காட்சி வைத்தோம். புகைப்படங்களால் சமூகமாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்று கற்றுக் கொண்டேன்.

தொகுப்பு - மஜித்ரா

## வெப்பப் பக்கவாதம் (Heat Stroke) என்றால் என்ன?

அதிக வெப்பத்தால் ஏற்படும் பிரச்சனைகளில் மிகவும் ஆபத்தானது "ஹீட் ஸ்ரோக்" எனப்படும் வெப்பப் பக்கவாதம். இது நிகழும் போது ஒருவரின் உடல் வெப்பநிலை 41 டிகிரி செல்சியசைத் தாண்டி இருக்கும். முழுவதுமாக அல்லது அரைகுறையாக சுயநினைவை இழந்திருப்பார்கள். பல நேரங்களில் இந்த வெப்பப் பக்கவாதம் நிகழும் போது வியர்வை பெரிய அளவில் சுரக்காது. முக்கியமாக குழந்தைகள் மற்றும் பெரியவர்களிற்கு இந்த நிலை ஏற்படும். உடனே இதற்கு முதலுதவி செய்து மருத்துவனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். இல்லையென்றால் உயிரை இழக்கும் நிலை கூட ஏற்படலாம்.

**அறிகுறிகள்**

- எரிச்சல், சருமம் வரட்சி
- தலைசுற்றல், மயக்கநிலை, தள்ளாடும் நிலை.
- தலைவலி, குழப்பம்
- சோர்வு
- தண்ணீர் குடித்தும் அடங்காத தாகம்.
- அதிக உடல் வெப்பநிலை.
- வலிப்பு.

**என்னென்ன முதலுதவிகள் செய்ய வேண்டும்?**

- உடனே மருத்துவ உதவியை நாட வேண்டும். உதவி வரும் வரை ஒருவர் அருகில் கட்டாயம் இருக்க வேண்டும்.
- மிகவும் குளிர்ந்த நிழலான பகுதிக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.
- இறுக்கமான உடைகள், மேலாடை போன்ற தேவையில்லாத உடைகளை அகற்றி விடவும்.
- குளிர்ந்த நீரில் நனைத்த துணி அல்லது ஐஸ்கட்டிகள் கொண்டு தலை, முகம் மற்றும் கழுத்திற்கு அழுத்தம் கொடுக்கவும். குளிர்ந்த நீரை முகத்தில் தெளித்துவிடவும்.
- தண்ணீர், பழச்சாறு போன்றவற்றை குடிக்கச் சொல்லி வற்புறுத்த வேண்டாம்.

## மூடநம்பிக்கை என்ற ஒன்று உள்ளதா?

- ப.பத்மதீபன் -

முற்காலத்தில் அறிவியல் மேதைகளும் கணிதவியலாளர்கள் மற்றும் ஆராச்சியாளர்களும் வாழ்ந்தது போன்று இன்று அறிவியல் ஞானிகள் சமூகத்தில் மக்களோடு மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களா? மக்களின் கல்வி அறிவு அறிவியல் சார்ந்து இப்போதும் மேம்பட்டிருக்கிறதா? என்ற கேள்விகள் எழத்தோன்றுகின்றது. முன்னைய காலத்தில் கணிக்கப்பெற்ற மாயன் நாட்காட்டிகள், பல்லவ மன்னர் சிற்பங்கள், கட்டுமானப் பணிகள் பிரமிட்டுகள் என கூறிக்கொண்டே போகலாம். இதனூடாக அக்கால அறிவியலை எடை போடலாம். சம்மந்தமில்லாமல் கூற வந்த விடயத்திற்கு அப்பால் செல்கிறேனோ என நீங்கள் இப்போது சிந்திக்கக் கூடும்.

மூட நம்பிக்கை என்றால் என்ன? மூட நம்பிக்கைகள் என்ற ஒன்று உள்ளதா? உண்மையிலேயே மூட நம்பிக்கைகள் என்ற ஒன்று இல்லை. அறிவியலாளர்களால் கண்டறியப்பட்ட சமூக நலன் சார்ந்த சமூகத்தை நெறிப்படுத்தக் கூடிய அல்லது வழிப்படுத்தக் கூடிய விடயங்கள் அல்லது எண்ணங்கள் மூடநம்பிக்கைகளாக உருவெடுத்தன. ஏனென்று கேட்டால் ஒரு உதாரணத்திற்கு இரவிலே மரங்களிற்குக் கீழே அதிக நேரம் இருந்தால் பேய்பிடிக்கும் என்பது எம்மிடையே நிலவுகின்ற அல்லது நிலவிய ஒரு கருத்து. அது பொதுவாகவே மூடநம்பிக்கை என்றே பார்க்கப்படுகின்றது. ஆனால் உண்மை என்ன வெனில் இரவு நேரங்களில் மரங்கள் சுவாசத்தின் போது அதாவது ஒளித்தொகுப்பு நடைபெறாத போது கரியமில வாயுவை வெளியிடுகின்றன ($CO_2$). மனிதர்கள் தங்கள் சுவாசத்தின் போது ஒட்சிசன் வாயு ($O_2$) அகத்துறிஞ்சப் படுகின்றது. ஆகையால் மரங்களின் கீழ் ($CO_2$) நிறைந்த ஒரு வழிச்சூழல் ஏற்படுகிறது. எனவே $O_2$ குறைபாட்டால் மூச்சுத்திணறல் ஏற்படுகின்ற வாய்ப்புகள் மற்றும் சுவாசச் சிக்கல்கள் உடனடியாக ஏற்படும் வாய்ப்பு உண்டு எனவே சமூகத்தில் உள்ள அறிஞர்கள் மக்களின் நலன் கருதி இரவில் மரங்களின் கீழ் தங்குவதைத் தவிர்க்க அறிவுறுத்தியிருப்பார்கள்.

பாமரமக்களிற்கு இவை எல்லாம் புரியாது. எனவே மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அறிவியலாலர்களிடையே இருந்தது. எனவே இவ்வாறான கட்டுக் கதைகளைச் சொல்லியிருப்பார்கள் அதுவே பரம்பரைபரையாக அக் காலத்தில் வழிநடத்தப்பட்டிருக்கும். ஆனால் தற்போது இவற்றை சிறுவயதிலேயே பாடசாலையில் கற்றுக் கொள்வதனால் முன்பு சொல்லப்பட்ட கட்டுக் கதைகளை மூடநம்பிக்கைகள் என்கின்றோம்.

எனவே மூடநம்பிக்கை என்ற ஒன்று அல்ல அறிவியலாளர்கள் தாங்கள் அறிந்த நல்ல விடயங்களை மக்கள் பின்பற்றவும் தீய விடயங்களை மக்கள் பின்பற்றாமலும் இருப்பதற்கு பாமர மக்களிற்கு சொல்லிப் புரிய வைக்க இயலாது என்பதாலும் மக்களை மக்களை வழிப்படுத்தும் பொறுப்பு இருந்தமையினாலும் மக்களை அதிகம் கவரும் விடயங்களை அல்லது மக்கள் அதிகம் அஞ்சும் விடயங்களை காரணங்களாக உரைத்திருக்கலாம். எனவே மூட நம்பிக்கைகள் என்று நாம் நினைப்பது அறிவியலாளர்களால் கண்டறியப்பட்ட உண்மைகள் பாமரமக்களை வழிப்படுத்துவதற்குக் காரணமாக இருக்கும்.

## பாதுகாப்பான செல்போன் பயன்பாடு

**01)** செல்போனை நீண்ட நேரம் கையில் வைத்திருப்பதால் கைகளின் வழியே கதிர்வீச்சு பாதிப்புக்கு நாம் உள்ளாகலாம். கையிலேயே வைத்திருப்பதற்குப் பதிலாக பலகை. மேசை போன்ற கடினமான மேற்பரப்பின் மீது வைத்து ஒரு கையாலேயே "டைப்பிங்", "சாட்டிங்" செய்யலாம்.

**02)**பயணங்களின் போது மொபைல் பயன்னடுத்துவதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால், பயணங்களின் போது சிக்னல் கிடைப்பது சிரமம். இதனால் கதிர் வீச்சு அபாயமும் அதிகம்.

**03)**உங்களிற்கு மொபைல்போன் தேவைப்படாத போதெல்லாம் "ஏர்ப்ளேன் மோட்" ஆப்சனில் வைத்துவிடுங்கள். குறிப்பாக. நீங்கள் தூங்கும் போது இது எல்லாவிதக் கதிர்வீச்சு அபாயங்களிற்கும் "குட் பை" செல்லிவிடும்.

**04)**எப்போதும் உங்கள மொபைல் போனை உங்கள் உடலில் இருந்து 7 முதல் 10 இன்ச் வரை தள்ளியே வைத்திருங்கள். மொபைலில் சிக்னல் இருக்கும் போது எல்லாம் கதிர்வீச்சு அபாயம் இருந்து கொண்டேதான் இருக்கும். அதனால் கைகளிலும் உங்களது சட்டைப் பைகளிலும் மொபைல் போனை வைத்திருப்பதற்குப் பதிலாக உங்களது பர்ஸ். கைப்பை என மொபைலுக்கான இடத்தை மாற்றுங்கள்.

**05)**மொபைல் போனை நேரடியாகக் காதில் வைத்துப் பேசுவதை விட நல்ல தரமான ஹெட்போன் மூலம் பேசும் போது மொபைல் போனை கையில் பிடித்திருக்காமல் பக்கத்திலுருக்கும் நாற்காலியிலோ. எதிரில் இருக்கும் மேசையிலோ வைத்துப் பேசுவது நல்லது.

## இருப்பிடத்தை குளுமையாக வைத்துக்கொள்ளும் வழிகள்

ஏ.சியை நீங்கள் எந்த அளவிற்கு வைத்திருக்கிறீர்களோ அந்த அளவு அது அறையிலுள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி விடும். அறையிலுள்ள உங்களின் உடலை மட்டும் அது சும்மா விட்டுவிடுமா என்ன? உங்கள் உடலில் தேவையான அளவு இருக்கும் ஈரப்பதத்தையும் உறிஞ்சி விடும். இது உங்களிற்கு உடற்சோர்வை ஏற்படுத்தும். முறையாக ஏ.சியைப் பராமரிக்கவில்லை என்றால் கூட அதனால் சுவாசப் பிரச்சினைகள் ஏற்படும். ஏ.சி பில்டரை முறையாகச் சுத்தஞ் செய்து அழுக்கு தூசி போன்றவற்றை அவ்வப்போது அகற்ற வேண்டும்.

காலை முதல் மாலை வரை ஏ.சி குளிரில் செலவு செய்வதால் உடல் சுறுசுறுப்பை இழக்க நேரிடும். குளிரிலேயே இருந்து பழகி விட்டால் பின்னர் குறைவான வெயிலைக் கூட நம் உடல் ஏற்றுக் கொள்ள முடியாமல் திணறும். திடீர் என வெப்பநிலை மாற்றம் ஏற்படும் போது அதை உடல் ஏற்றுக்கொள்ளாமல் ஒவ்வாமை. சுவாசம் சீரின்மை போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு. நாள் பட்டநோய்கள், வாதப்பிரச்சினைகள் உள்ளவர்கள் குளிரூட்டப்பட்ட அறையில் அதிக நேரம் செலவழிக்க வேண்டாம். காரணம் அது உடலின் இரத்த அழுத்தத்தைக் குறைவாகவே வைத்திருக்கும். அதற்காக ஏ.சி பயன்படுத்தவே கூடாது என்றில்லை. அதிகக் குளிர் இல்லாமல் மிதமான வெப்பத்தில் பயன்படுத்துவது நல்லது.

இதற்கு மாறாக. உங்கள் வீட்டைச் சுற்றி நிறையச் செடிகள் மரங்கள் இருப்பது போல பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் வீடு இருக்கும் சுற்றுப்புறத்தில் கொசுக்களைக் கட்டுப்படுத்தி விட்டாலே. நீங்கள் இரவில் இயற்கைக் காற்றில் ஜன்னலைத் திறந்து வைத்து உறங்கலாம். எப்போதும் உடலைக் குளிர்ச்சியாக வைத்துக் கொண்டால், வெயில் காலத்தைச் சுலபமாகக் கடந்து விடலாம்.

# கேட்டியளே சங்கதி



- வானம்பாடி -

"வீடு ஒழுக்கு கூரை மாத்த வேணும் எண்டா. வீட்டுக்காறர் யன்னல் கதவை மாத்தி வீட்டுக்கு பெயின்ற் அடிச்சு கொடுக்கிறார்" என்ன குமார் புதிர் போடுறீர் இந்த வெயிலில் உம்மையும் தாக்கி விட்டுது போல என தில்லை அண்ணர் மரத்தடி மாநாட்டில் புதிர் அவுக்க தூண்டில் போட்டார்.

நீர் ஒரு ரீயூப்லைற் தான் எல்லாத்தையும் விபரமாகப் பேச முடியுமா? இப்ப வந்த அரசியலில் தலைக்கு வந்தது தலைப்பாவோட போச்செண்டு. புனரமைப்பு செய்யப் போய் புதுசு புதுசா பல பிரச்சினை பிரச்சினையாச் தெரியுது. அதை சொன்னா விளங்கேல்லையோ உமக்கு.

கொஞ்சம் பொறும். முருகர் சந்தையால வாறார் சாமான் சக்கட்டோட சங்கடத்தையும் சுமந்து வாறார் போல எனக்கிருக்கிற கோவத்துக்கு உங்களுக்கு வாய்க்கு சம்பல் கேக்குது போல என சீறிச் சினந்தார் முருகர்.

என்ன என்ன ஏன் கொதிச்செழுந்து வாறீர் ஏன் சாமான் சக்கட்டுகள் விலை ஏறிற்றுதோ?... என தூண்டில் போட்டார் தில்லை. தில்லை நீர் இந்த நாட்டில தான் இருக்கிறீரோ அல்லது சந்தோசத்துக்கு சாப்பாட்டுக் கடை நடத்துறீரோ விலைவாசி மெல்ல மெல்ல பனை உச்சிக்கு போகுது. 3 சதம். 5 சதம். 10 சதம் ஆக இருந்த வடை இப்போ 40. 50 ரூபா ஆயிட்டுது. இனி சாப்பாட்ட சொல்ல தேவையில்ல. ஏன் ஏன் .. சந்தைக்குத் தானே போனநீர். சாப்பாட்டுக் கடைக்கு போகேல்ல தானே.

இப்ப வெசாக் காலமாம் சந்தை பூட்டிக் கிடக்கு. இறைச்சி. சாராயம். கள்ளு பூட்டினால் பறவாயில்ல சந்தையிலுள்ள அரிசி.மரக்கறி. காய்கறியள் வாங்க முடியாமலும் இருக்கு என்ன அரசாங்கமோ. எல்லாரும் தங்க தலையைப் பாதுகாக்க சமயத்தை தலையில வைச்சுப்பாக்கினம். எல்லாம் எங்கடயளும் சேர்ந்து மௌனிச்சா இன்னும் எத்தின நடக்கப் போகுது..

மேதினத்தை ஏழுச்செலவாக்கிப் போட்டினம். அது சரி தொழிலாளர் தினமாக் கொண்டாடினாத் தானே அது இப்ப அரசியல்வாதிகள திட்டித் தீர்க்கிற தினம்தானே. என்ன சுதந்திரத்த தொழிலாளர் அனுபவிக்கினம் இப்ப......

மேதினம் பிறந்ததே பல தொழிலாளர் உயிர் பறித்து உரிமை வென்ற நாள் எண்டத இன்றைய அரசியல் வாதிகளுக்கு தெரியுமோ என்றார் முருகன்.

சிக்காக்கோ நகரில வெடித்த மேதினம் உலகையே உணர வைத்தது. 8 மணி நேர வேலை. வேலை நிரந்தரம். வேலை நிறுத்தம் செய்யும் உரிமை. குடியிருப்பு வசதிகள் என பல உரிமைகள் வென்றெடுத்த நாளே மே.01 உலகம் கூடிக் கொண்டாடும் 1891 முதல் மேதின் கொண்டாடப் படுகின்றது.

இதற்காக உயிர்கொடுத்த தொழிலாளர் தினமே உலக தொழிலாளர்தினம் ஒற்றுமையின் தினமாகும். இதை எங்கட நாட்டில அரசியல் குத்துக்கரணங்களை வெளிப்படுத்துவினம். இதை ஊடகங்கள் பல வடிவங்களாகத் தீனி போடுவினம் இப்ப தொழிலாளர் முதுகில அரசியல்வாதிகள் புழுகுகளை அவிட்டு விடுகிற நாளா போச்சுதே பார்....

காணிகள் விடுவிச்சாச்சாம். இன்னும் விடுவினமாம் எல்லாம் நாங்க நினைச்சா விட்டுவோம் எண்டு இராணுவம் சொல்லும் . இதை நாங்க தான் விடுவிச்சம் என்று அரசியல்வாதிகள் சொல்லீனம். இந்த காணி விடுவிக்க ஒரு தொகை பணங்களைக் கொடுத்துத் தான் விடுவிச்சம் என்று மந்திரி சொல்லுறார்.

அப்ப முருகண்ணே நேர இராணுவத்திட்ட எண்டா அரசாங்கம் என்ன செய்தது?. அரசியல்வாதிகள் உரிமை கோரினமே. எங்கட நாட்டில இப்ப அரசா? இராணுவமா? அரசியல்வாதியா? யாரிட்ட குறை நிறையள சொல்லுறது? யாருக்கு நன்றி சொல்லுறது?

இது எல்லாம் தலையும் தலைப்பாகைகளும் சரியா இருந்தா வாக்குறுதிகளும். செயற்பாடுகளும் ஒழுங்கா இருக்கும். எந்த வாக்குறுதிகள் ஒழுங்கா நிறைவேறி இருக்கு? மாலையும்.மேடையும். மைக்கையும் கண்டா எதையாவது பத்திரிகைத் தலைப்புக்க் போசினா சரி.இதை மக்கள் நம்பினால் தானே!. அது தானே கலக்கமாய் இருக்கு அரசியல்வாதிகளுக்கு இப்ப..

தில்லை அண்ணே கணக்குப் பாத்தா 65 இல் இருந்து 35 ஆக சரிஞ்சத கண்டுபிடிச்சிட்டினமே. இது இனி மாகாண சபையில 18 ஆகி விடுமே தெரியேல்ல இப்ப பேசிற பேச்ச பாத்தா ஆகலாம் ஆகும் போலதான் இருக்கு. எல்லோரும் முதலமைச்சராக விருப்பம் தான் அதுக்கு ஒரு கதிரை தானே இருக்கு. என்ன செய்யலாம் முருகர்?

இது வெகு சுலபம் சுளச்சிமுறையில. சங்கீதக் கதிரை மாதிரி பாட்டைப் போட்டு நடத்தலாம் தானே? இதைத் தானே சென்னன் மாலையும். மைக்கையும். மேடையையும் கண்டா எதையும் பேசுவம் கணக் கெடுக்காதயுங்கோ எண்டு. ஆனா மக்கள் கணக்கா பதில் சொல்ல உங்கட வாயள கட்டுப்படுத்துங்கோ. எல்லாத்துக்கும் ஆசைப்பட்டு இருக்கிறதையும் இழந்திட்டு ஓட்டை பானையாக்கா தேயுங்கோ.

அண்ண ஒரு செய்தி தெரியுமே? என பீடை போட்டார் கனகர். எங்க ஊரில கோள்மூட்டி எல்லோ திரியுது. பாத்து பேசுங்கோ

என்ன புதுக்கதை விடுறாய் கனகர் முந்தித்தான் வானத்தில கோள்மூட்டி சுத்தும் பின்பு கழுகு வந்து குண்டு போட்டுட்டு போகும் அது போல எல்லோ கிடக்கு நீ சொல்லுறது.

அது அப்ப. இது இப்ப நாங்கள் தொங்கு மண்றங்களில் நின்று தொடர முடியாம சின்னப் பெடியள் போல. ரீச்சர் அவர் மாங்காய் வைச்சிருக்கிறார் தர மாட்டாராம் அதிபரிட்ட சொல்லுங்கே எண்டு மாநகர சபையைப் பற்றி மாகாண சபையிட்ட முறையிட்டு விசாரணை என்டும் விளக்கங்கள் என்டும் ஆட்டம் தொடங்கீட்டு. அதை விட கூட்டம் கூடினாலும் மக்கள் தேவைகள் எவ்வளவே இருக்க எங்க சிலையள் யாருக்கு வைக்கலாம் எண்டு மக்கள் தொடர்பில்லாமல் தேசிய பட்டியல் வாரிசுகள் ஊடகங்களில் ஊர் அக்கறையோட கதைக்கினம் கேட்டியளே.

இது எப்பவும் நடக்கிறது தானே மாகாண சபையில நடந்தது இப்ப மாநகர. உள்ளூராட்சியிலும் தொடருது. இது ஒன்டும் புதுசு இல்லயே. கற்ற அனுபவத்தைக் கொண்டு கிராம தேவையளை வகைப்படுத்தி முன்னுரிமைக்கு முக்கியத்துவம் கொடுத்து நடைமுறைப்படுத்த சகல குழுத் தலைமைகளும் முன்கூட்டி திட்டமிட்டு வீட்டிற்குள் தீர்க்கிறத வீதிக்குக் கொண்டு வராமல் இருந்து. மக்களின்ர நன்மதிப்பை பெற ஏதாவது செய்யுங்களேன். குளவிக் கூட்ட குளப்பி விட்டு கூத்து பாக்காம கட்சி தலைமைகளே கொஞ்சம் வழிகாட்டுங்களேன்....

ராகஸ்வரம் கலை மன்றம்

கலைஞர்களா நீங்கள்? அப்படியாயின் கலைத்துறையில் சாதிக்கவிருக்கும் உங்களிற்கு "களங்கள்" இல்லை என்று உணருகின்றீர்களா? தகுதி வாய்ந்த உங்களை கௌரவிக்க. மதிப்பளிக்க. சந்தர்ப்பங்கள்தர. மேலும் பயிற்சிகள் வளங்க "ராகஸ்வரம்" கலை மன்றத்தில் அங்கத்தவர்களாகுங்கள். சமூக செயற்பாட்டில் இனைய விண்ணப்பியுங்கள்.

ராகஸ்வரம் கலைமன்றம். 28/1, ஏ.வி.வீதி. கொழும்புத்துறை. யாழ்ப்பாணம்






**க.காவியா**
தரம் :- 09
யா/ஆனைக்கோட்டை றோக.தக.
பாடசாலை

## பாடசாலை

எமக்கு பாடசாலை மிகவும் முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. பாடசாலை இல்லை எனில் நாங்கள் இல்லை. பாடசாலைக்கு செல்வதன்மூலம் நல்ல பழக்க வழக்கத்தை வளர்த்து கொள்கிறோம். பாடசாலை மூலம் படித்து நல்ல பெறுபேறு எடுத்து ஒரு ஆசிரியர்களாகவோ வைத்தியராகவோ வரலாம். எம்மை உலகிற்கு அறிமுகப்படுத்தும் பாடசாலையினால் நாம் நல்ல பழக்கவழக்கங்களையும் கற்றுக்கொள்ளின்றோம். பாடசாலை இல்லாவிட்டால் நாம் இல்லை. பாடசாலையில் கல்விகள் மட்டுமல்ல நல்ல ஒழுக்கம், பெரியோரை எவ்வாறு மதித்தல் என்பனவும் கற்றுக் கொடுக்கப்படுகிறது பாடசாலையில் நாம் கற்று ஒரு தாதியோ, வைத்தியரோ, ஆசிரியராக வந்தா எமது ஆசிரியர்களுக்கு பெருமை. ஆலயம் இல்லாத ஊரில் குடியிருக்க கூடாது என்பது போல் பாடசாலை இல்லாத இடத்தில் குடியிருக்கக் கூடாது. மாணவர்களின் அனைத்து இலட்சியமும் நான் ஒரு வைத்தியர், நான் ஒரு ஆசிரியர், நான் ஒரு தாதி என்ற வெற்றி இலக்கை அடைவது தான். மாணவர்களின் தேவையெல்லாம் பாடசாலை பூர்த்தி செய்கிறது. படிக்காமல் இருப்பவர்களுக்குக் கூட ஆசிரியர் நிறைய கற்றுக் கொடுக்கிறார்கள். பாடசாலையில் அன்பை வளர்த்துக்கொள்ளலாம், அறிவை வளர்த்துக் கொள்ளலாம். பாடசாலை எமக்கு நல்ல நண்பன். நாங்கள் மாணவர்களாய் இருக்கும் போதுதான் பாடசாலையில் கல்வி கற்கலாம். கல்வி கற்கும் வயதில் கல்வி கற்று பாடசாலையில் அதிபர் ஆசிரியருக்கு நல்ல பெறுபேற்றை தேடிக் கொடுக்க வேண்டும்



**ப.மரியடினுசியா**
தரம் :- 10
யா/ஆனைக்கோட்டை றோக.தக.
பாடசாலை

## என் அப்பா என் உயிர்

அன்புள்ள அப்பா நீங்கள் நலமாக இருக்க நான் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அப்பா நீ ஒரு தெய்வம் எங்களை பெற்று வளர்த்து எங்களை படிக்க வைத்து எவ்வளவு நன்மை செய்து எங்களுக்காக வேலை செய்து எங்களை பராமரித்து இமை காப்பது போல எங்களை வழிநடத்தினி அப்பா உன்போல் அப்பா கிடைக்க நாங்கள் தவம் செய்து இருப்போம் நீ எங்களுக்காக மேசன், கூலி வேலைகளை செய்து எங்களுக்கு உணவளித்தாய்



**சி.ஜனுசிகா**
தரம் :- 09
யா/மானிப்பாய்
மெமோறியல்



## உலகை ஆழ வைத்தாயே

என்னை பெற்றெடுத்த தாயே நீயே
என்னை சுமந்தாயே பத்து மாதம்
சுமந்த நீ எனக்கு நிலா காட்டிநீ
சோறூட்டி வளர்த்தாயே சோறூட்டி வளர்த்து
அம்மா சொல்லிக்கொடுத்தாயே
அம்மா சொல்லிக் கொடுத்த நீ அ சொல்லி
கொடுத்தாயே அ சொல்லிக் கொடுத்த நீ
அப்பா சொல்லிக் கொடுத்தாயே அப்பா
சொல்லிக் கொடுத்த நீ அடி எடுக்க
வைத்தாயே அடியெடுக்க வைத்த நீ
உலகை ஆழ வைத்தாயே
நீ என் அன்னையே



**செ.தேவதர்சினி**
தரம் :- 10
யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.

## நூலகம்


நூலகம் என்பது தேன்கூடு
நூல்கள் ஒவ்வொன்றும் தேன் துளிகள்
வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகின்றான்
நீ வாசித்துப்பார் உன் தலையெழுத்தே மாறும்
வாசித்துப்பார் உன் மனதில் உள்ள அழுக்குகள்
குறையும். ஒவ்வொரு மனிதனுக்கும்
ஒவ்வொரு மனிதம் உண்டு அதுபோல்
நல்ல மனிதனுக்கு நல்ல நூல்கள் உண்டு
நீ வாசித்துப்பார் நல்ல பிரஜையாக உருவாகலாம்.



**சு.பிறைஷின்**
தரம் :- 09
யா/மானிப்பாய் இந்துக்
கல்லூரி.

## முதல்படி

எமக்கு மேலே உயரமான வானை
எம்மால் தொட முடியுமாயின்
தோல்வியை தோற்கடிக்க முடியும்
பரீட்சையில் தோற்றவன்
வாழ்வில் தோற்பான் என்றில்லை
உலகில் தோல்வியை கண்டவன்
வெற்றியை காணாதிருப்பதில்லை
வெற்றி பெற்றவன் தோல்வி
அடையாதிருப்பதுமில்லை
தோல்வியும் வெற்றியும் தொடர்ச்சியானதல்ல
தோல்வி தான் வெற்றியின் முதல் படி



**ஜெ.ஜெதுஷா**
தரம் :- 09
யா/ஆனைக்கோட்டை றோக.தக.
பாடசாலை

## இயற்கை ஒரு கொடை

இயற்கை எமக்கு கிடைத்த வரம் ஆகும்.
இயற்கையில் உள்ளவற்றை நாம் பார்த்தால்
போதும் உள்ளத்தில் ஒரு மாற்றம் ஏற்படும்.
இயற்கை எமக்கு இறைவன் கொடுத்த வரம்
நாம் இயற்கையில் பார்க்கக் கூடிய
பல காட்சிகள் உண்டு
அவற்றில் சில தான் மலை, மரம், நீர்வீழ்ச்சி,
அருவி, ஊற்று, பூக்கள் என்பனவாகும்.
இவற்றிலே நீர்வீழ்ச்சி, அருவி, ஊற்று என்பன
ஒரு அதிசயம்.
ஏனெனில் பூக்கள் மரங்கள் ஒருவித்தில்
இருந்து உருவாகிறது. ஆனால் நீர்வீழ்ச்சி
அருவி,ஊற்று ஒரு பொருளிலிருந்துஉருவாவதில்லை
எனக்கு இயற்கையை மிகவும் பிடிக்கும்
இயற்கையில் உள்ளவை எவ்வாறு உருவாகின்றன
என்று எண்ணினால் நாள் முழுவதும் யோசிக்க
வேண்டும். இயற்கை ஒரு வரம் ஒரு கொடை



**சு.பிருந்தா**
தரம் :- 06
யா/மானிப்பாய் மகளிர்
கல்லூரி.

## தேவதைகள்

தேவதை லோகத்தில் உள்ள அனைத்து தேவதைகளும் எப்படி உள்ளீர்கள் உங்கள் இராய்ச்சியம் எப்படி? உங்கள் தேவதை லோகத்தில் எல்லா தேவதைகளும் ஒன்றுகூடி உள்ளீர்கள். உங்கள் இறக்கைகள் பல நிறங்களில் உண்டு. நீங்கள் அழகு மிகுந்த தேவதைகள் உங்கள் தேவதை லோகம் மிகவும் அழகு. ராணி தேவதை மாணவர்களுக்கு கல்வி கொடுப்பார். ராணி தேவதையின் பிரதம மந்திரி நாடக தேவதை. எனக்கு அந்த தேவதைகளை மிகவும் பிடிக்கும். அதி கூடியதாக மின்னல் சக்தி பவரானது. எல்லா தேவதைகளும் நன்றாக வாழ வேண்டும். ராணி தேவதை வெள்ளையுடை அணிவார். பல ஆண்டுகள் தேவதைகள் வாழவேண்டும்



**பா.கம்சா**
தரம் :- 06
யா/மானிப்பாய் மெமோறியல்

## வினித்தாவிற்கு

வினித்தாவுக்கு நான் நல்ல சுகம்

புதுவருடத்தை நாம் சிறப்பாக கொண்டாடினோம் யாழ்பாணத்திற்கு அம்மாவுடன் சென்றேன். அங்கு விளையாட்டுப் பொருட்கள் வாங்கித்தந்தா எனக்கு மிகவும் சந்தோசமா இருந்தது. அதை நான் தங்கைக்குக் கொடுத்தேன். அவவும் சந்தோசமடைந்தாள்.

உங்கள் பாடசாலைக்கும் யாழ்களரி பத்திரிகை வருவதாக அறிந்தேன் எமக்கும் களரி கிடைத்தது. சிறுவர் ஆக்கங்களை நாம் எழுதாத காரணத்தால் 'சிறுவர் களரி' வரவில்லை என்று அந்த அண்ணா சொன்னவர். நான் இத்துடன் கடிதத்தை முடித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
பா.கம்சா



**ஈ.வினித்தா**
தரம் :- 09
யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய
வித்தியாலயம்.

## கம்சாவுக்கு

அன்புள்ள நண்பி!

நான் நலம் நீ நலமாயிருக்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

கடந்த 30.01.2018 அன்று எமது பாடசாலை விளையாட்டுப் போட்டி 1.30 மணிக்கு சிறப்பாக நடைபெற்றது. அன்றுதான் நீர் அனுப்பிய கடிதமும் கிடைத்தது. அதில் உமது பிறந்தநாள் கொண்டாட்டத்தைப் பற்றியும் 'சிறுவர் களரி' பற்றியும் குறிப்பிட்டிருந்தீர் அந்த பத்திரிகையின் சிறுவர் பக்கத்தை வெட்டி அனுப்பியமைக்கு நன்றி இங்கே சரியான மழை உமது பெற்றோரை கேட்டதாக சொல்லவும். இந்தக் கடிதம் தாமதமாக வருகிறது என்று குறை நினைக்காதயும். சித்திரை வருடக் கொண்டாட்டம் எல்லாம் முடித்துத்தான் நேரம் கிடைத்தது. பாடசாலைக்கும் ரியூசனுக்கும் ஒழுங்காக போகிறீர் என்றும் நல்லா படிக்கிறீர் என்றும் அறிந்தேன். சந்தோசம்.

இப்படிக்கு
ஈ.வினித்தா



**ஆர்.பமிலா**
தரம் :- 10
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## நட்பு

நட்பு என்பது நடிப்பல்ல
நண்பர்களின் நாடித்துடிப்பு

உயிர் தந்தவர் அம்மா
உயிர் காத்தவர் அப்பா – எனக்காய்
உயிர் கொடுப்பது நட்பு

எங்கிருந்தோ வந்தோம் ஒன்றாக பழகினோம்
ஒன்றாக திரிந்தோம் சிரித்தோம் கதைத்தோம்
எப்போதும் ஒன்றாகவே இருப்போம் இதற்கு
காரணம் நட்பு

அணைக்க ஒரு கையிருந்தால்
அரவணைக்க ஒரு நட்பிருந்தால்
அழுவது கூட சுகம் தானே

அம்மா கடவுளுக்கு நிகரான வரம்
மனைவி கடவுள் தந்த வரம்
நண்பன் – கடவுளுக்கும் மேலான வரம்

தோள் கொடுக்க தோழனும்
தோள் சாய தோழியும் இருந்தால்
அனைவருமே பாக்கியசாலிகள் தான்



கட்டுரை

# விடுதலைக்குப் போராடும் ஈழத்துத் தமிழ்மக்கள் 3

## வரலாற்றை உருவாக்குவோம்

தனிஈழம் வேண்டுமா என்று வாக்கெடுப்பு நிகழ்த்த வேண்டும் என்ற ஒரு செய்தி அடிக்கடி உச்சரிக்கப்படுவதுண்டு. உண்மையில் தமிழ்ஈழம் வேண்டுமா என்ற கேள்விக்கு வேண்டும் என்றும், வேண்டாம் என்றும் பதில் வரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அதிலும் குறிப்பாக ஈழத்தமிழர்களே தமிழ் ஈழம் வேண்டாம் என்று எதிர்ப்புக்காட்ட தயாராக உள்ளனர் என்பது மறுக்கவோ அல்லதுமறைக்கவோ முடியாத உண்மை. யார் இந்த எதிர்ப்பாளர்கள்? அவர்கள் ஏன் தனிஈழம், தனித் தமிழ் அரசு என்பவற்றை விரும்புவதில்லை என்று சிந்தித்துப்பாருங்கள்.

தனியரசு என்பது என்ன?, அப்படி ஒரு அரசு அமைவதன் நன்மைகள் என்ன? என்பதன்தெளிவான விளக்கத்தை தமிழர்கள் கொண்டிருப்பார்கள் என்று ஒத்துக்கொள்ள முடியாது. பொதுவாக தமிழர்கள் தங்களைப்பற்றிய அறிவினை இருவழிகளில் பெற்றிருப்பர். ஒன்று பள்ளிக்கல்வி மற்றையது ஊடகங்கள், புத்தகங்கள் மற்றும் உரைகள். இவ்வாறு பெறப்படும் அறிவுதான் தமிழர்களுக்கு தமிழர்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும். இந்த இடத்தில் ஒரு சம்பவத்தை சொல்லமுடியும். குறிப்பாக தமிழ் திரைப்படங்களில் வரும் ஒரு காட்சி. இப்போது ஈழவிடுதலைக்கும் தமிழ் திரைப்படத்துக்கும் என்ன சம்பந்தம், அதை ஏன் இடையிலே புகுத்துகிறீர்கள், சொல்லவந்த செய்தியை சுருக்கமாக சொல்லுங்கள், வாசிக்கும் எங்களை வதைக்காதீர்கள் என்றஇந்த நினைவுகள் உங்களுக்கு வந்து போகலாம். இந்தத்தொடர் வாசிப்பதற்காக எழுதப்படவில்லை. யோசிப்பதற்காக எழுதப்படுகிறது. இவை பொழுதுபோக்குச் செய்திகள் அல்ல. சிந்திக்கவேண்டிய செய்திகள். எங்களை நாங்கள் இழந்த இடங்கள். எம்மை நாம் தவறாக வழிநடத்திய தடங்கள். எனவே கடந்தகால அனுபவங்களைக் கொண்டு நிகழ்காலத்தை திட்டமிட்டு எதிர்காலத்தில் நடக்க வேண்டும். நீ என்ன தலைவரா? மக்களை வழிநடத்த என்ன தகுதி உண்டு? என்றெல்லாம் கேட்கவேண்டாம். எனது ஆதங்கத்தை சொல்கிறேன். அது பலனளிக்கும் காலம் வரும். அப்போது ஈழத் தமிழர்கள் வெற்றி பெறுவார்கள். நிறைந்த ஒரு வாழ்வை அவர்கள் வாழ்வது மட்டு மன்றி, உலகத்தமிழ் மக்களுக்கே வழிகாட்டியாக இருப்பார்கள். இந்த வெற்றியை பெறவேண்டுமானால் ஈழத்தமிழ் மக்கள் முதலில் தங்களைப்பற்றி தெளிவாக அறியவேண்டும். போலிகளை களையவேண்டும். புதுமைகள் படைக்கவேண்டும். அந்த நாள் வராமல் போகாது. கண்டிப்பாக வந்தே தீரும். இனி தொடங்கிய செய்திக்கு வருவோம்.

பொதுவாக தமிழர்கள் யாபேரும் விரும்பியோ விரும்பாமலோ தமிழ் திரைப்படங்களை பார்க்க வேண்டியே உள்ளது அல்லது பார்ப்பார்கள். அவர்கள் தேவையின் அடிப்படையில் பார்க்கிறார்கள் என்று சொல்லமுடியாது. பொழுதுபோக்கு அடிப்படையில் தான் திரைப்படங்களை பார்க்கிறார்கள். இருப்பினும் அதில் சொல்லப்படும் செய்திகள்அவர்களால் உள்வாங்கப்படுகின்றன. இந்த உள்வாங்கல் அவர்களிடம் நிலைத்துப்போவதால் அதைப்பின்பற்றவும் ஆரம்பிக்கிறார்கள். இதுவே கருத்துருவாக்கம் என்று சொல்லப்படுகிறது. அதாவது ஒரு செய்தியை தவறாக அல்லது சரியாக மக்கள் மனதில் விதைத்தல். இவ்வாறு விதைக்கப்படும் கருத்துக்கள் மக்களிடையே தாக்கங்களை ஏற்படுத்தும். இக்கருத்துக்கள் நல்லவையாக இருப்பின் சமூகத்தில் பயனுள்ள மாற்றங்களை கொண்டுவரும். தவறாக அமையின் சமூகத்தில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். இப்போது காட்சிக்கு வருவோம்.

"என்ன அரசியல்பேசிறவனுக்கு பயப்படுரியா?, யாரு ரீக்கடையளில ரீ குடிக்கேக்கபத்திரிக்கை படிச்சு அரசியல் பேசுறவனை சொல்லுறியா? இல்லசாப்பிட்டுக்கொண்டு அரசியல் பேசிறவனை சொல்லுறியா?" இவங்களெல்லாம் வெத்து வேட்டுக்கள், இவங்கள்பொழுதுபோக்குக்கு கதைச்சிட்டு அப்பிடியே போயிடுவாங்க. இவங்களுக்கு பயப்பிடவே தேவையில்லை. அது அவர்களின் பொழுதுபோக்கு அரசியல், கவலைப்படாமல் உன்ரை வேலையைப்பார்" என்கின்ற போக்கில் காட்சிகள் அமையும். ஆக, அது வெளிக்காட்டி நிற்பது எதை என்று சிந்திக்கவேண்டியுள்ளது. அதாவது அரசியலுக்கு உரியவன் அவன்தான். அவன் பொழுதுபோக்காக இல்லாமல் என்றைக்குப் பொறுப்புடன் செயல்படுகிறானோ அன்றே காட்சி மாறும். அரசியல் மாறும். இந்தக்கருத்து ஆழமாக உள்வாங்கப்படுவதில்லை. அதிலும்இன்றைய உலகு வியாபாரத்தை மையமாக வைத்து இயங்குவதால் பொதுவாகவே மனிதன் எதையும் சிந்திக்கவோ அல்லது தெளிவான கருத்துகளை கண்டுபிடிக்கவோ முடியாமல் ஓடிக்கொண்டிருக்கின்றான். எங்களுக்குத்தெரியாமல் எங்கோ இருக்கும் ஒருவருக்காக நாம் உழைக்கின்றோம். எமக்கு பலனளிக்கின்றதா? என்ற கேள்வியை மனதில் போடாமல் நாள் முழுக்க உழைக்கின்றோம். எங்களது உழைக்கும் ஆற்றல் முடியும்போதுதான் சிந்திக்கத்தொடங்குவோம். காலம் கடந்து போய்விடும். உழைத்ததன் பலனுமின்றி வாழ்வை அனுபவித்த சுவையுமின்றி கடந்துவந்த பாதையை சிந்திப்போம். விளைவு இனி என்ன "சென்றதெனி மீளாது மூடா" என்பதுதானே. இதற்கோர் நல்ல உதாரணத்தை சொல்கின்றேன்.

புதிய விலை உயர்ந்த தொலைக்காட்சிப்பெட்டியை வாங்கிவிடுகின்றோம். ஆனால் அதில் நிகழ்ச்சிகளை வீட்டில் அமர்ந்து இருந்து பார்க்க நேரமில்லை. கடன்பட்டுவிலை உயர்ந்த மகிழுந்து ஒன்றினை வாங்கிவிட்டு அக்கடன்கட்ட நாள் முழுக்க ஓடி ஓடி உழைப்போம். இப்படி பல செய்திகளை அடுக்கலாம். ஆனால் மக்கள் ஏற்கமாட்டார்கள் காரணம் நாம் எமக்காக வாழ்வதிலும் மற்றவர்க்காக வாழ்வதற்கே அதிக நேரம் செலவிடுகின்றோம். மற்றவர்க்கு என்பது மற்றவர்க்கு உதவவல்ல எங்கள் பெருமைகளை மற்றவர்களுக்கு காட்ட. ஈழவிடுதலைக்கும்இதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்பீர்கள். நிறைந்ததொடர்புகள் உண்டு. அதாவது நாங்கள் எங்கள் ஈழவிடுதலை தொடர்பான அறிவை முழுமையாகப் பெறவில்லை என்பதுதான் அது. கோபம் வேண்டாம், அடுத்த கட்டத்திற்கு செல்வோம். நானும் உங்களில் ஒருவன்.

ஈழத்தமிழர்களிடம் ஆழமான போராட்ட எண்ணம் இருந்ததா? என்பது சற்று சிந்திக்க வேண்டிய ஒன்றாக உள்ளது. நான் தமிழில் வெறுக்கும் ஒரு வரியினை முதலில் குறிப்பிடுகிறேன். அது" கல் தோன்றி மண் தோன்ற முன் தோன்றிய மூத்தகுடி எங்கள் தமிழ் குடி" தேவையா இது, இதைச்சொல்வதனால்என்னபெருமை, அடுத்து தொடங்குவார்கள் உலகில் தமிழன் இல்லாத நாடில்லை, தமிழனுக்கு என்றும் ஒரு நாடில்லை. ஏன் இதைசொல்கிறார்கள் என்று புரியவில்லை. பேச்சுக்கள் பேசுகிறார்கள், கவிதைகள் படிக்கிறார்கள், பாட்டுக்கள் பாடுகிறார்கள், கைகோருங்கள் என்றால் நடைமுறையில் அது இல்லை என்பதே உண்மை. தமிழர் வரலாறு என்றால் அது தமிழ் இலக்கிய வரலாறு என்பதில் ஆரம்பிக்கிறது. பொதுவாக இந்தியா தான் எமது தொடக்க வரலாறு என்பதாகவே எங்கள் இலக்கியங்கள் கட்டமைக்கப்படுகிறது. ஈழம் தொடர்பான சிந்தனைகள் எங்களிடம் வேரூன்றச் செய்வதற்குப்பதில் இந்தியச்செய்திகள் வலுவாகச் சொல்லப்படும். கேட்டால் பழந்தமிழ் இலக்கியங்கள் எங்கள் வேர்கள் என்பர். அவை உண்மையா இல்லையா என்று நாம் சிந்திப்பதும் இல்லை. யாரும் சிந்திக்க விடுவதும் இல்லை. உண்மைக்கு புறம்பான கற்பனைக் கதைகளை மக்களிடம் பரப்பி, ஈழத் தமிழன்பற்றிய சிந்தனைகளை எங்களிடம் தடுத்துவிட்டனர். இதற்கு நல்லதொரு உதாரணம் சொல்ல விரும்புகின்றேன்.

ஒரு வெளி நாட்டுக்காரர், அவர் ஈழத்தமிழர்களின் வாழ்வியலுடன் தொடர்புபடுகிறார். அதாவது புலம்பெயர்ந்து வந்த ஈழத்தமிழ் பிள்ளைகளுக்கு தமிழ் அறிவூட்டுவது அவர் வேலை. தமிழ் எழுத்தறிவு என்றில்லாமல் ஈழத்தமிழர் கதைகளை சொல்வது. ஈழத்தமிழர் தொடர்பான செய்திகளை சொல்லிக்கொடுப்பது. நாங்களே தமிழ் வேண்டாம் என்று விடும்போது இவன் ஏன் தமிழ் ஊட்டுகின்றான் என்று கேள்வி கேட்கவேண்டாம். அதை விலக்கிவிட்டு செய்திக்கு வருவோம். அவர்தன்னை என்னிடம் அறிமுகம் செய்து, பின்பு என்னிடம் கேட்டார் ஈழத்தில் தமிழ் கதைகள் உண்டா?, அவ்வாறு தமிழ் கதைகள் சொல்லியவர்கள் உண்டா? என்றார். நான் யோசிக்க ஆரம்பித்தேன். மீண்டும் அவர் சொன்னார், தெனாலிராமன் கதைகள், முல்லா கதைகள் போன்று ஈழத்திலும் இருக்கும் அவற்றைச்சொல்லுங்கள் என்றார். நான் உடனே கல்லடி வேலுப்பிள்ளை என்று ஒருவர் இருந்திருக்கின்றார் என்றேன். நல்லது, அவரது விபரங்களைத்தாருங்கள், அவரது கதைகளை சொல்லுங்கள் என்றார். உண்மையாகவே சொல்கின்றேன் "சிங்களத் தீவினிற்கோர் பாலம் அமைப்போம் "தமிழ் சிறந்த மொழி இருந்தாலும் சமஸ்கிருதம்தான் தேவமொழி" என்று சொன்ன பாரதியார் தெரியும். ஆனால் எங்கள் நாட்டில் பிறந்து வாழ்ந்த ஒரு மனிதன் பற்றி தெரியவே தெரியாது. அவர் கதைகளும் தெரியாது. இப்போது எனக்கு அவர் பற்றிய எந்த விபரமும் தெரியாது என்றேன். அடுத்து அந்த வெள்ளைக்காரர் சொன்னார் கல்லடி வேலர் என்று பலர் எனக்கும் சொன்னார்கள். ஆனால் அவரின் விபரமும் கதைகளும் எனக்கு வேண்டும், வலைத்தளங்களில் தேடியும் கிடைக்கவில்லை,அதனால் தான் தேடுகிறேன். ஏனென்றால் பிற நாட்டுக்கதைகளை சொல்லிக்கொடுப்பதிலும் சொந்த நாட்டுக்கதைகளை சொல்லிக் கொடுக்கவேண்டும். அப்போதுதான் தங்கள் தாய்நாட்டை அவர்கள் நேசிப்பார்கள், தங்களுக்கு முன் வாழ்ந்த பெரியோர்களை அறிந்துகொள்வார்கள், தங்கள் கதைகளை மற்றோர்க்கும் சொல்வார்கள், என்று கூறி தனது மினஞ்சல் முகவரியையும் தந்துவிட்டு சென்றார். இது நடந்து ஏறத்தாழ மூன்று வருடங்கள் வரை வரும். அதன்பின் அவர் வரும்போதெல்லாம் நான் ஓடி ஒழித்து விடுவேன். காரணம் கல்லடி வேலர் தொடர்பாக எனக்குத்தெரியவில்லை என்பது மட்டுமல்ல, அவரின் விபரங்களை தேடியும் பெறமுடியவில்லை என்பதும், இதனால் இது கூட தெரியாமலா வாழ்கிறீர்கள் என்று அவர் நினைப்பார் என்ற தாழ்வு எண்ணமும், அவரை சந்திக்காமல் தடுத்து விட்டது. ஆனால் இன்னமும் ஈழத்தில் வாழ்ந்த கதை சொல்லியவர்களையும்,கதைகளையும் நான்கண்டுபிடிக்கவில்லை என்பது உண்மை. எங்களைப்பற்றி நாங்கள் தெரியாமல் இருப்பது பெரிய குறைபாடு இல்லையா?

இந்த இடத்தில் இன்னொன்றையும் நாம் சிந்திக்கலாம். நாம் ஊரில் இருக்கும்போது எங்கள் வீடுகளில் எங்களுடைய பரம்பரையினரான அப்பு, ஆச்சி அதனைவிட மற்றும் இறந்த உறவினர்கள் படங்கள் இருக்கும். அந்தக்காலங்களில் படங்கள் என்பது மிகப்புனிதமாக பார்க்கப்படும். நாங்கள்அவர்கள் படங்களை கவனமாக பாதுகாத்து வைத்திருப்போம். இப்போது நினைவுமலர் பதிப்பிப்பதே அவமானம் என்று தவிர்க்கும் காலம் வந்துவிட்டது. எங்கள்முன்னோர்கள் எமக்காக தேடி வைத்து சென்ற சொத்துக்களை அம்மா தந்தது, அப்பா தந்தது, ஆச்சி தந்தது, அப்பு தந்தது என்று கவனமாக பாதுகாப்போம். எங்கள் காணிக்குள் ஒருவர் உள்வர விடமாட்டோம்.இப்படியாக எனது, எங்களுடையது என்ற எண்ணம் எங்களிடம் பலமாக இருந்தது. ஆனால்ஈழம் என்ற நாடும், நாம் பேசும் தமிழும் எங்களுடையது, எங்களுக்கு உரிமையானது, எங்கள் பரம்பரையினர் ஆண்டு அனுபவித்து வாழ்ந்த பூமி, இங்குஎங்களுக்கென்று அழுத்தமான வரலாறு உண்டு, ஈழத்தமிழர்க்கென தனித்த சிறப்பான கலை, கலாசாரம், பண்பாடு உண்டு என்று இடித்துச் சொல் லப்படவில்லை என்றே சொல் லவேண்டும். எங்களுக்கு முந்தைய செய்திகள் எமக்கு தெளி வாக சொல்லப்படாமையால் அல்லது எங்கள் வரலாற்றை அறியவேண்டும் என்ற ஆவல் எமக்கு ஏற்படுத்தப்படாமையால், நாங்களும் எங்கள் நாட்டை விரும்பவில்லை. எங்கள் தமிழை நேசிக்கவில்லை, சுலபமாக தாய்நாட்டை தூக்கியெறிந்து விட்டு வேறு நாடு செல்கின்றோம். அங்கு வாழ்வுரிமை பெறுகின் றோம். இது மட்டுமல்ல எங்கள் சந்ததி தொடர்பாக, எங்கள் வழித்தோன்றல்களுக்குச் சொல்லாமல் விட்டுவிடுகின்றோம். எங்களுக்காகவரலாறுகளை உருவாக்கித்தந்த எங்கள் சமூகத்தின் சொத்துக்களான பெரியோர்கள் யாரையும் நாங்கள் கொண்டாடவில்லை. அதனால் எங்களை சுலபமாக மறக்கின்றோம்.

விடுதலைப்புலிகளின் வருகையின்பின் இங்குஅதிக மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அதாவது வரலாறுகள் எடுத்துச் செல்லும் இலக்கியங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. மக்களிடம் "இந்த மண் எங்கள் சொந்தமண்" என்ற எண்ணம் பலமாக பதியச் செய்யப்பட்டுள்ளது. இயற்கையை பேணுதலின் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. கலை, பண்பாடு, கல்ாசாரம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஈழத்தமிழ் மக்கள் தொடர்பான வரலாறு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஈழத்தில் வாழ்ந்த திறமையாளர்கள் இனம்காணப்பட்டனர். இது மட்டுமன்றி விடுதலைப்புலிகளின் காலத்தில் தமிழ்ஈழம் வேண்டும் என்ற நிலை ஈழம் கடந்து உலகெங்கும் வாழும் தமிழர்கள் மட்டுமன்றி உலகில் வாழும் ஏனைய மக்கள் மனதிலும் விதைக்கப்பட்டது. இவை எல்லாம் பாரிய மாற்றங்கள்தான், இருப்பினும் இன்றும் நாங்கள் தமிழ் ஈழத்தை விரும்பாதோர் தொடர்பாக தெரிந்து வைத்துள்ளோமா? தமிழ்ஈழம் தொடர்பான நம்பிக்கையுடன் உள்ளோமா? எங்கள் வழித்தோன்றல்களுக்கு தமிழ்ஈழம் தொடர்பாகசொல்லிவைக்கிறோமா?, அதில் எங்கள் கடமை என்ன?என்பவற்றை தொடர்ந்து பார்ப்போம்.

பரமபுத்திரன்

# கவி நிலம்



ரேகா சிவலிங்கம்
கம்பர்மலை,
யாழ்ப்பாணம்

# ரேகா சிவலிங்கம் கவிதைகள்

### காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை

சுற்றும் பூமி சுற்றியே ஆகும்
சுழலும் நேரம் சுழன்றே தீரும்
கற்றுக் கொள்ள கடலளவு இருந்தும்
கண்ணை மூடி இருப்பது ஏனோ

காலங்கள் பல இருக்கென்று எண்ணி
கனவில் நீ இருக்காதே தம்பி
கடமை பல இருக்கென்று எண்ணி
விரைந்து நீயும் செயற்படு தம்பி

இயந்திரமாக நீ செயற்பட வேண்டாம்
இயங்காமலும் நீ இருந்திட வேண்டாம்
சுதந்திரமாக நீ வாழவும் வேண்டும்
சுழலும் நேரத்தோடு ஓடவும் வேண்டும்

சாதனை புரிய பற்பல உண்டு
சோதனை வந்தால் வேதனை தள்ளு
தடைக்கல் கண்டு தளராதே நின்று
படிக்கல் ஆக்கு வரலாறு உண்டு

கனவு மட்டுமே வாழ்வில்லை பாரு
கனவை நனவாக மாற்றனும் கேளு
கடந்து போகும் காலங்கள் பாரு
உனக்காக மட்டும் காத்திருக்குமோ கேளு

காலத்தை நீயும் கருத்தில் எண்ணி
கடமை புரிய புறப்படு தம்பி
காலங்கள் யாருக்காகவும் காத்திருக்காது பாரு
நாளை சுழல்வோமென வீற்றிருக்குமோ கேளு

### கதை சொல்லும் சாளரம்

பூட்டிய மனதிலே
வாட்டிடும் நினைவுகள்
மீட்டியே தவித்திடும்
காதல் கனவுகள்
காணும் காட்சிகள்
கானலின் சாட்சிகள்
கலைந்தே போனதே
காதல் கனவுகள்
கண்களின் வண்ணங்கள்
கற்பனை எண்ணங்கள்
கனவில் மூழ்கியே
தொலைந்த பொழுதுகள்
கணமும் கதறுதே
வலிகளில் விழிகள்
வாழ்வு முழுதுமே
கண்ணீரே துணைகள்
வலிகளை வரியிலே
கோர்க்குதே என் கவிகள்
கவிகள் தானே என்
கதை சொல்லும் சாளரம்.

### விடியாமல் ஓர் இரவேது

நிலையான வாழ்வு உலகிலே
கிடையாதே
விடியாமல் ஓர் இரவேதும்
சுழலாதே
இயலாத வெற்றிக்கும்
முயற்சிக்க தவறாதே
முயலாமல் வெற்றியும்
உன்னிடம் சேராதே
தோல்விகள் தழுவினால்
மனதாலே வருந்தாதே
தோற்றவர்கள் வெற்றியின்
வரலாறு மறவாதே
மாற்றங்கள் ஒன்றே
மாறாதது புரியாதே
போராடி உயர்ந்திடு
தடையாலே தளராதே

### நீ எழுது தீர்ப்பு

நீதி வேண்டுமோ நீதி
எங்கே கிடைத்திடும் நீதி
உன் கையிலெடு நீதி
அப்போது மறையும் அநீதி

நீதியிலே என்றுமே நீதியில்லை
தட்டிக் கேட்கவே நாதியில்லை
பிஞ்சுக் குழந்தைக்கே சுதந்திரமில்லை
போர்க்கொடி தூக்குவதிலே பலனுமில்லை

சட்டம் தருமோ தீர்ப்பு
இறைவனுமே பாரான் நோக்கு
காமமிருகங்களை அடித்தே போக்கு
அநீதிகளை களைந்து நீக்கு

பெண்ணாகப் பிறந்தாலே சாபக்கேடு
பெண்ணுறுப்பு ஆணுக்கு காம ரோடு
காமம் தீர்க்கப் பல சிவப்பு ரோடு
இருந்தாலுமே அலையுதே வேறு ரோடு

பெற்றவள் அவளுமே பெண்தானே
உற்றவளாக பிறந்தவளுமே பெண் தானே
பெற்றவள் உற்றவளை விடுவாயோ
காமப் பேய்களே இது புதிர்தானே

கற்புநெறி பெண்களுக்கு ஒன்றுதானே
கற்பழிப்பு அழியுமோ என்று தானே
கண்ட செய்தி ஒரு நாள் இன்றுதானே
சில நாளிலே மறைந்திடுமே உண்மைதானே

போர்க்கொடி தூக்கும் கூட்டமே
நீங்கள் இணைந்தாலே போதுமே
மனித மிருகங்களின் ஆட்டமே
விரைவிலே எடுத்திடும் ஓட்டமே

ஒன்றாக இணைவதே நீதி
நீதிக்கே நீ எழுது நீதி
சமுதாயம் வழங்கட்டுமே நீதி
கண் திறக்கட்டும் சட்டத்தின் நீதி

### ஜாதி (தீ)

மனிதனே மனிதனுள்ளே
மூட்டிவிட்ட தீ
கடல் நீர் கொண்டும் அணைக்க
முடியா பெருந்தீ
கொழுந்து விட்டு எரியுது அநீதி
ஜாதி நெருப்பிலே கருகுதே நல்நீதி


ரத்தமும் நிற மொன்றே பித்தனே
உணரின்றே
செய் தொழில் வாழ்விற்கே பகுத்து
ஏனிங்கே
முத்தியில் பிரிவுண்டோ உயர்பிறப்பென்ற
தெரிவுண்டோ
பக்தியென்று சட்டமிட்டே
பகுத்தறிவு இழக்கலாமோ

பிறப்பில்லை பேதம் நீ பிரித்ததாலே
கோபம்
அறிந்து கொள்ளு நல்வேதம்
ஜாதியில்லை யென்று ஓதும்
குணங்களே காட்டும் மனிதபேதம்
இனங்கள் என்று ஒன்றுமில்லை போதும்

பாரதி மறுபிறப்பெடுக்கவே வேண்டும்
பார் தீயென்று எழுது கோலெடுக்கவே
வேண்டும்
சூழும் தீயினையே வதைத்திட வேண்டும்
சூழ்ந்திடாமல் இனியாகிலும் தடுத்திடவே
வேண்டும்

### "மை" வகை கேளீர்

"மை" வகை பற்றி நான்
சொல்வதென் கடமை
சொல்வதை கேட்டிட
உனக்குண்டோ பொறுமை?
உடம்பின் நிறம் கருமை!
யார்தான் விரும்புவார்?
உடம்பின் நிறம் வெண்மை!
யார்தான் விரும்பிடார்?
தலைமுடி நிறம் வெண்மை!
எவர்தான் ஏற்பார்?
தலைமுடி நிறம் கருமை!
எவர்தான் வெறுப்பார்?
பாலின் நிறம் வெண்மை!
அனைவரும் விரும்புவர்!!
கள்ளின் நிறமும் வெண்மை!
எவர்தான் விரும்புவர்?
அடுத்தவர் எமக்குத்
துன்பம் செய்தாலும்
சகித்திட எமக்கு
வேண்டும் திறமை!!
அடுத்தவர் உயர்ச்சிகண்டு
கொள்ளாதீர் பொறாமை!
பொறாமை கொள்ளாது
இருப்பதெமக்குப் பெருமை!!
எங்கள் வாழ்விலென்றும்
வேண்டும் தூய்மை!
எங்கள் நாக்கிலென்றும்
வேண்டும் வாய்மை!!
சித்தத்திலும் புத்தியிலும்
இருக்க வேண்டும் கூர்மை!
சிந்தையிலும் புத்தியிலும்
இருக்கவேண்டும் நேர்மை!!
சொல்லிலும் செயலிலும்
வேண்டும் திறமை!
விழியிலும் வழியிலும்
வேண்டும் செழு(ம்)மை!!
வாழ்க்கையில் வழமை–
இளமை முதுமை!
வாழ்க்கையில் பொதுமை–
இம்மை மறுமை
நன்மை தீமை–
வாழ்வினில் இயற்கை!
வறுமை செழுமை–
வாழ்வினில் இயற்கை
மென்மை வன்மை–
இயற்கையின் தன்மை!
கொடுமை கடுமை–
இயற்கையின் தன்மை!
செயற்கரியது செய்பவர்க்குக்
கிடைத்திடும் பெருமை!
செய்யத்தகாதது செய்பவர்க்குக்
கிடைத்திடும் சிறுமை!!
எந்தப் பெண்ணுக்கும்
வாய்க்க வேண்டும் தாய்மை!
எந்தப் பெண்ணிற்கும்
இதனால்தான் பெருமை!!
சேய்மை என்பார்கள்–
நெடுந்தூரம் என்பதனை!
அண்மை என்பார்கள்–
குறுந்தூரம் என்பதனை!!
வேல்விழிகளின் அழகுக்கு
அழகூட்ட ஒருவகைமை!
நரைத்த தலைமுடிக்கு
கருமையூட்ட ஒருவகைமை!!



- முருகு -



## பல்சமய கருத்தாடல் நிலையம்

எமது நாட்டில் சமாதானம், நல்லிணக்கத்தை ஏற்படுத்த விரும்பும் உறவுகளே! "சிங்கள மக்களிற்கு தமிழர்களின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த ஓர் செயற்திட்டம்" இதில் கருத்தாடல் செய்யவும், களத்தில் பணியாற்றவும், நீங்களும் உறுப்பினராகலாம் விண்ணப்பியுங்கள்.

பல் சமய கருத்தாடல் நிலையம்
28/1 ஏ.வி.வீதி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்

வைத்திலிங்கம்-சூசை-கயித்தார்-சூசைப்பிள்ளை அவர்களின் வழி வந்த ஏட்டுச்சுவடுகள் அதில் உள்ள தமிழ் மருத்துவ ஆவணங்கள் சிதைவுற்ற நிலையில் காணப்படுகின்றது. இவர்கள் வாய் வழியாகக் கடத்தப்பட்டு வந்த அலேசர் அம்மானை சூசைப்பிள்ளையின் மூத்த மகளான மரியலூர்த்தாவிடமிருந்து தகவல்கள் தொகுக்கப்படுகிறது

# அலேசர்




" 1856ஆம் ஆண்டில் வயாவிளான் என்னும் சிற்றூரில் வாழ்ந்து வந்தவர்கள் வைத்தியும் மகன் சூசையும். இவர்கள் பல தலைமுறைகளைக் கொண்டவர்கள். ஆதி காலத்தில் காட்டில் தவமிருந்து இறைவன் அருளால் பல ஏடுகள் எழுதிய சித்தர்களிடம் ஏட்டின் மூலம் சித்த வைத்தியம் கற்றவர்களின் வழி வந்தவர்கள் வைத்தியும், மகன் சூசையும் ஆவார்கள்.. இவர்களிடம் பல விதமான ஏடுகள் இருந்தன. அதில் ஒரு ஏட்டில் "அலேசர் அம்மானை" இருந்ததால் அதைப் புதிதாக எழுத விரும்பி 1856ம் ஆண்டு தை மாதம் காங்கேசன்துறை கம்பன் குலத்தில் உள்ள ஒருவரிடம் கொடுத்து எழுதி வைத்திருந்தார். அந்த நாட்களில் தங்கள் கோவிலுக்கு வந்த குருவானவரிடம் அலேசர் அம்மானைப் பற்றிக் கூறி அதைப் புத்தகமாக அச்சிட்டுத் தரும்படி கொடுத்தார். குருவானவரும் அப்படியே அச்சிட்டுக் கொடுத்தார். இந்தக் காலகட்டத்தில் சித்த வைத்தியமும் தோட்டமும் செய்து வாழ்க்கை நடத்தி வந்தார்கள். சூசை என்பவருக்கு கையித்தார் பிறந்தார். கையித்தாரின் இளம் பருவத்திலே தந்தையை இழந்தார். அதனால் குடும்பப் பொறுப்பு அதிகமானது. அதனால் வைத்தியம் செய்ய முடியவில்லை. தோட்ட வேலை மட்டும் செய்து வந்தார். கையித்தார் திருமணமாகிப் பிறந்த குழந்தைகளில் மூன்று பேர் ஆண்கள். அதிலொருவர் பெயர் சூசைப்பிள்ளை ஆகும். சூசைப் பிள்ளை மட்டுமே வைத்தியத் தொழிலில் ஆர்வம் கொண்டார். இவர் யாழ்ப்பாணத்தில் திருமணம் செய்திருந்தார். 1949 ம் ஆண்டு கொழும்புத்துறை ஏ.வி வீதியில் குடி கொண்டு வாழ்ந்து வந்தார்.

சூசைப்பிள்ளைக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் பிறந்தார்கள். சூசைப் பிள்ளையிடம் அந்த "அலேசர் அம்மானை"இருந்ததினால் அடிக்கடி படிப்பது வழக்கம். நான் மூத்த மகளாய் இருந்ததினால் தகப்பனாருடன் சேர்ந்து படிப்பேன். ஆதலால் அலேசர் அம்மானையின் கதைச்சுருக்கம் எனக்கு நன்றாகத் தெரியும். அதனால் அந்த வரலாற்றை சுருக்கமாகச் சொல்ல முன்வந்துள்ளேன்.'

✍ டே.மரியலூர்த்தா

(முன்கதைச்சுருக்கம்)

இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளுக்கு போர்த்துக்கீசர் வியாபார மார்க்கமாக வந்த காலத்தில் கிறிஸ்தவ மதம் பரவலானது. அப்போது தென்னிந்தியாவில் தற்போது தஞ்சாவூர் என்று அழைக்கப்படும் ஊரில் பென்டோல் என்னும் அரசன் ஆண்டு வந்தார். அவர் மனைவி பெயர் பீக்கா. பென்டோல் பீக்கா என்பவர்களுக்கு அலேசர் 1656.12.03 ல் பிறந்தார். அலேசரின் தந்தை நீதி தவறாது ஆட்சி புரிந்தார். அரசனின் ஒரே மகன் வளர்ந்து அரசனுக்குரிய சகல கலைகளும் கற்றான். தன் ஒரே மகனுக்கு திருமணம் செய்து வைக்க மன்னன் பென்டோல் முன் வந்தான். காஞ்சிபுரத்தை ஆட்சி புரிந்த மன்னன் வாஞ்சி சுந்தரன் என்பவருக்கும் மனைவி சோமாவதிக்கும் மகளான லீலா என்னும் பெண்ணை மணமுடித்து வைக்க விரும்பித் தன் மகன் அலேசரிடம் விருப்பம் கேட்டார். ஆனால் அலேசரோ மறுத்தார். தன் வாழ்க்கையை இறைவனுக்க அர்ப்பணிக்கப் போவதாகக் கூறினார்.

மன்னன் பென்டோல் தன் சிநேகிதன் வாஞ்சி சுந்தரனின் மகளுக்கே சம்பந்தம் பேசி நிச்சயம் பண்ணினார். அலேசர் மனமோ பித்துப்பிடித்தது போல கலங்கியது. ஆனால் தந்தையோ உன் திருமணம் நடப்பது நிச்சயம் எனக் கூறி திருமண ஆயத்தங்கள் செய்தார். அலேசரின் முப்பத்தைந்தாவது வயதில் திருமணம் நடைபெற்றது.

திருமணம் நடந்த அன்றே இரவுநேரத்தில் அலேசர் தன் மனைவி லீலாவிடம் சென்று தனது திருமண மோதிரத்தைக் கழற்றி லீலாவிடம் கொடுத்து இதை வைத்துக் கொள் வாறேன் என்று கூறிவிட்டு யாருக்கும் தெரியாது அரண்மனையை விட்டு வெளியேறினார். அந்த இருட்டில் கணவன் வருவார் என்று வழிமேல் விழி வைத்து காத்திருந்தாள் அந்த அரசிளமங்கை லீலா.

அரண்மனை முழுவதும் செய்தி பரவியது. இரவோடிரவாக நாடு முழுவதும் தேடினார்கள். அலேசர் எங்கேயும் தென்படவில்லை. மாறுவேடத்தில் இருட்டில் கடலோரம் சென்றார் அலேச்ர். வியாபார மார்க்கமாகச் சென்ற கடற்கப்பலில் கூலி கொடுத்து பயணமானார். கையில் பணமோ, உடுப்போ எதுவுமில்லை. பட்டினி கிடந்து இயேசுவை மனதில் எண்ணி செபித்தார். கடல் தாண்டியதும் பசியுடன் நடந்து ஆபிரிக்கா சென்றார். சமுத்திரம் தாண்டி பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தார். அந்த நாட்டு மக்களுடன் பேச முடிந்தது ஏனென்றால் அலேசர் அரசகுமாரன் என்பதால் சகல பாசையும் கற்றிருந்தார். ஏழையாக வீதி வழியாகத் திரிந்தார். பிச்சையெடுத்துச் சாப்பிட்டார். இப்படியே அலையும் காலத்தில் நாட்டு மக்களிடம் பேசி கோவில், விடுதி, மடம் போன்றவைகள் இருக்கும் இடங்களை அறிந்தார். ஒரு நாள் ஒரு குருவானவரைச் சந்தித்தார், உரையாடினார். தனக்கு ஒரு வேலை எடுத்துத் தரும்படி கேட்டார். அதற்கு குருவானவர் தான் இருக்கும் மடத்தில் பலவிதமான வேலைகள் உண்டு என்று கூறி மடத்திற்கு வரும்படி அழைத்தார். அலேசரும் குருவுடன் மடத்திற்கு சென்றார். குருவானவர் தன் பெரிய குருவானவரிடம் பேசினார். அலேசரின் இறைபக்தியும், அடக்கம், அமைதி, கீழ்ப்படிவு போன்ற நற்குணங்களைக் கண்டு அலேசருக்கு ஒரு அறையும் கொடுத்து சமையல்காரனாக வேலையும் கொடுத்தார். அலேசரும் நன்றி கூறி தன் பணி தொடர்ந்தார்.

# அம்மானை

அலேசரைப் பிரிந்த தந்தை பென்டோல் கவலையில் நோய்வாய்ப்பட்டார். படுக்கையில் கிடந்த அரசனின் நோயை மாற்ற முடியாது என்று வைத்தியர்கள் கைவிட்டார்கள். அதனால் தான் இருக்கும் போதே நாட்டை யாரிடம் ஒப்படைப்பது என்று பல முறை யோசித்தார். மன்னன் தனது மருமகள் லீலாவை அரசியாக்க எண்ணி முடிசூட்டி அழகு பார்த்து சில மாதங்களில் விண்ணுலகம் சென்றார். காலங் கடந்து கொண்டிருக்கையில் அலேசருக்கு மடத்தில் நல்ல பெயர் இருந்தது. அவரிடம் நற் பண்புகள் இருந்ததால் பெரிய குரு அலேசரிடம் நல்ல மதிப்பும் வைத்திருந்தார். அந்த நாட்களிலே அலேசர் நோய்வாய்ப் பட்டார். நடக்க முடியாது படுக்கையில் இருந்தார். அதனால் சக ஊழியர்கள் அலேசரை மதிக்கவில்லை. மடத்தில் உள்ள பெரியவர்கள் சாப்பிட்ட கழிவுகள், முள்ளுகள், எலும்புகள் மிகுதி உணவுகள் யாவற்றையும் சேர்த்து உணவாகக் கொடுப்பார்கள். அலேசரும் கையால் அளைந்த அருவெறுப்பான மிகுதிச் சாப்பாடுகளை இயேசுவுக்காக மன நிறைவுடன் சாப்பிட்டார். காலங்கள் உருண்டன. இறைவன் அலேசருடன் இருந்தார். இறைவன் தன்னுடன் பேசுவது போல் உணர்ந்தார். தேவதூதன் வந்து அலேசருக்கு ஆறுதல் கூறுவார். அலேசர் படுக்கையில் கிடந்தாலும் பாவிகளுக்காகச் செபித்தார். அலேசருக்கு மரணிக்கும் நாள் இறைவனால் குறிக்கப்பட்டது. இதனையுணர்ந்த அலேசர் தன் வாழ்க்கை வரலாறு அதாவது தன் பிறப்பில் இருந்த அரச குடும்பத்தின் நிலை, திருமணம், நாடுகடந்து மடத்திற்கு வந்ததும், மடத்தில் அனுபவித்த துன்பங்கள், சக ஊழியர் விளைவித்த துன்பங்கள் யாவும் கடிதமாக எழுதி தனது கைய்ரண்டினுள் வைத்து கும்பிட்டபடி முழந்தாள் படியிட்டு செபித்த வண்ணம் இறைபதம் சேர்ந்தார். அப்போது அலேசருக்கு வயது 47. (1703.08.01).

அலேசர் உயிர் பிரிந்ததையறிந்து மடத்தின் தலைமைக் குரு வந்து பார்த்த போது அலேசர் முழந்தாள் படியிட்டு கைக்குள் கடிதம் இருப்பதையறிந்தார். ஆனால் குருக்கள், ஆயர் செபித்தும் வழிபாடுகள் நடத்தியும் கும்பிட்ட கை திறக்கப்படவில்லை. கடைசி முயற்சியாக ஆயர் திருப்பலி வைத்து எழுந்தேற்றம் பண்ணும்போது கை திறக்கப் பட்டது. கையிலிருந்த கடிதம் அலேசர் தன் கையால் எழுதிய வாழ்க்கை வரலாறாகும்.

அலேசர் திருமணம் செய்து மனைவியுடன் சேர்ந்து வாழாவிட்டாலும் மனைவியைப் பிரிந்ததாலும், மோதிரத்தைக் கழற்றி மனைவியிடம் கொடுத்து வைத்துக் கொள் வாறேன் என்று சொன்னதாலும் அலேசருக்குக் கோவில் இல்லை. ஆனால் திருச்சபையானது அலேசரை இயற்கை மற்றும் ஏழைகளின் புனிதராக நியமித்துள்ளது

- தொடரும் -

# வல்லையின் இந்திரவிழா

வல்வெட்டித்துறை தனித்துவமான சிறப்பியல்புகள் பலவற்றைக் கொண்டுள்ளது. சங்க கால மரபுகளும், பண்பாடும், உணவுப் பழக்கங்கள், கலை இலக்கியம், கட்டிடக் கலை, வீரம் செறிந்த வரலாறுகளும் எனத் தனித்துவமான ஊராகக் காணப்படுகின்றது.



கடந்த 50 வருடங்களாக வல்வை நெடிய காட்டு இளைஞர்கள் மற்றும் நெடியகாடு மோர் மட வரவேற்புக் குழுவினராலும் கொண்டாடப்படும் இந்திரவிழா தற்போது வட்வெட்டித் துறையின் சகல அமைப்புக்களும் இணைந்து பெரு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. பல்லாயிரக் கணக்கானோர் திரண்டு இந்திர விழாவின் சிறப்பம்சங்களான புகைக் கூடுகள், வெளிச்சங்களிலான உருவக் கட்டவுட்டுக்கள், நாதஸ்வரக் கச்சேரி, நடனம், நாடகம், இசை நிகழ்வுகள், கரகாட்டம், பொம்மலாட்டம் என்று இந்திரவிழா சிறப்பாகக் காணப்படுகின்றது. வட்வெட்டித்துறை முத்துமாரியம்மன் புதுமைகளும் தனிச் சிறப்புக்களுமாக அம்மனின் அருளால் நடை பெற்றுவரும் இந்திர விழா உலகப் புகழ் பெற்றுள்ளது.

# மே - 18

துன்புறும் மக்கள் துயரில் உங்கள் அரசியலைச் சீர் தூக்கிப் பார்க்க முனையாதீர்கள். எந்த அமைப்பும் குழுக்களும் இழவு வீட்டில் புகுந்து விளையாடும் கள்வர்கள் போல் வீடு புகுந்து தமிழரின் ஒற்றுமையை சிதைவுற முன்னிற்காது இருப்பதே நாம் காட்டும் அஞ்சலிகளாகட்டும்.

தமிழின அழிப்பின் - தமிழ்ர் பேரவலத்தின் நினைவிடமான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடத்துவதில் ஆளுக்கு ஆள், கட்சிக்கு கட்சி அமைப்புக்களுக்கு அமைப்பு முண்டு பிடித்து முரண்பட்டு நிற்பது மேலும் மேலும் வரலாற்றுக்குறை செய்வதாகவே அமையும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், வடக்கு மாகாணசபை, புதுக்குடியிருப்பு வணிகர் சங்கம் இப்படிச் சகல தரப்பினரும் ஒன்றுபட்டு ஒரு தீபம் ஏற்ற முடியாத நிலை ஏன் உருவாக வேண்டும்? தலைமைகளே சிந்தியுங்கள்

# வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில்

## "2017 – முதலமைச்சர் விருது பெற்ற கலைஞர்கள்"

### மூத்தகலைஞர்களால் சிறப்புப் பெறும் முதலமைச்சர் விருது








வடமாகான பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முதலமைச்சர் விருது 2017 வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த மூத்த கலைஞர்கள் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர். அதில் நடைபெற்ற நடன நிகழ்வையும் விருது பெறும் கலைஞர்களையும் படத்தில் காணலாம். வடமாகாணத்தைச் சேர்ந்த முதலமைச்சர் விருது பெற்ற கலைஞர்களுக்கு யாழ்களரியின் பாராட்டி வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.


கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS

DS.589 அரச அங்கிகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சி பாடசாலை

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200, 071 4546 960



கல்விச்சேவைக்காக
ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விருது.

★★★ கல்விச்சேவையுடன் ஒன்றிய நிறுவனம் ★★★

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி.
- இரவு நேர வாகனப்பயிற்சி.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப்பயிற்சி.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

**யாழ்ப்பாணம்**
- சுன்னாகம். 021 224 2022.
- பருத்தித்துறை. 021 492 3201
- கச்சேரி. 021 222 6699
- ஆவரங்கால். 021 222 6688
- தெல்லிப்பளை. 021 224 3737
- சாவகச்சேரி. 021 227 0700
- நெல்லியடி. 021 300 6550

**கிளிநொச்சி**
- கிளிநொச்சி. 021 228 5505
- பூநகரி. 021 320 1818
- விசுவமடு. 021 320 1515
- முழங்காவில். 021 300 6544

**மன்னார்**
- மன்னார். 023 225 1656

**வவுனியா**
- வவுனியா. 024 222 7777.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி.

வடமாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை


வடகிடிக்கு சமூக நல்லிணக்கத்திற்கான அமைப்பின் ஏற்பாட்டில்

### "போதை ஒழிப்போம் வன்முறை தவிர்ப்போம்"

### யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் ஒழிப்பு செயற்திட்ட ஆரம்பநிகழ்வு












இப்பத்திரிக்கை ஜோ.ஜெஸ்ரின் என்பவரால் காந்தள் புலம்பெயர் இளையோர் அனுசரணையில் சுன்னாகம் கே.கே.எஸ் வீதியிலுள்ள முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத்தில் 01.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்ற